ஞாயிறு வெளியீடு ஆண்டு சந்தா ரு. 5 தனிப்பிரதி 0—1—3 REGD. No. M. 4642

# திராவிடநாடு

மலர் 4 | காஞ்சீபுரம் 24—3—1946 | இதழ் 49

கற்பனைச் சித்திரம்:

## குமரிக் கோட்டம்

சௌமியன்.

"ஸ்ரீமான் குழந்தைவேல்செட்டியாரவாள், மகாஉத்தமர். அவருடைய திவ்யகுணத்தைத் தேசமபூராவும் போற்றுகிறது. இப்படிப் பட்டவா, ஒருசிலராவது இருப்பதாலேதான், காலம் கலிகாலமா இருந்தாலும், மழைபெய்யறது, பூலோகத்தைச்சமுத்திராதி உற்பாதங்களால் அழிக்க முடியவில்லை என்றுகூறலாம்.

உலகமே தலைகீழாக மாறிக் கொண்டிருக்கும் இந்தக்காலத்திலே, பெரியவாளுடைய காரியங்களை நாசம்செய்யறதை, பிரமாதமான சீர்திருத்தம்னு பேசிண்டிருக்கு, ஒருராட்சசக் கூட்டம். அப்படிப்பட்டவாளெல்லாம்,நம்ம செட்டியாரின் சர்வபரித்தியாகத்தைக்கேட்டாளானு, நடுநடுங்கிப் போவாள். லோகத்திலே, எல்லாவிதமானபாசத்தையும் ஒருவர் அடக்கலாம். ஆனா, இந்தப்புத்ரபாசம் இருக்கே, அதனைச்சாமான்யமா அடக்கமுடியாது. சக்ரவர்த்தி தசரதனாலேகூடப் புத்ரசோகத்தைத் தாங்கமுடியவில்லைஎன்பதுலோகப் பிரசித்தமானவிஷயம். நம்மசெட்டியார், தமதுகுமாரன், ஒரேமகன், ஆச்சார அனுஷ்டானாதிகளுக்கு விரோதமான காரியம் செய்யத் துணிந்தபோது, எவ்வளவோ இதோபதேசம் செய்துபார்த்தும், அவன் பிடிவாதமாக இருக்கக் கண்டு, என்னசெய்தார்? மகன் என்ற பாசத்தைக்கூட, உதறித் தள்ளிவிட்டார். அவ்விதமான,தவச்சிரேஷ்டராக்கும், நமதுசெட்டியாரவாள். தமதுஒரேபுத்ரன் ஏதோ காலவித்யாசத்தாலும், கெட்டவா சகவாசத்தினாலும், பொதுவாகவே லோகத்திலே இப்போதுதலைவிரித்துஆடுகிற அதர்மக்கோட்பாடுகளைநம்பியதனால், உத்தமமான வைசியபரம்பரையிலே உதித்ததையும் மறந்து, கேவலமான காமாதி பாசத்திற்குப்பலியாகி, குலதர்மத்தைக்கவிட்டு, வேறுகுலஸ்திரியை மணம்செய்து கொள்ளவேண்டுமென்று, பிடிவாதம் செய்தது கண்டு, சோகம்கொண்டு, தன்மகனுக்குச் சாஸ்திராதிகளைச்சாங்கோபாங்கமாகஎடுத்துக்கூறித்தடுத்துப் பார்த்தும், முடியாததால், பெரியவா காலந்தொட்டு இருந்துவரும் புராதன ஏற்பாட்டுக்கு விரோதமாகநடந்துகொள்வதைக்கைவிட்டு விடாதபட்சத்தில், இனித்தன் கிருஹத்தில் காலடிஎடுத்து வைக்கவே கூடாது என்றுகூறிவிட்டார். உன் முகாலோபனமும் செய்யப்போவதில்லை என்று சொல்லிவிட்டார். அவனும் வீட்டைவிட்டுப் போய் விட்டான். புத்ரசோகம் மகா கொடுமை. அதனைநமது செட்டியார் தாங்கிக்கொண்டது, நமக்கெல்லாம், ஆச்சரியமாக இருக்கு. ஆனா, ராஜரிஷிகளின் மனம்எப்போதும் இப்படித்தான் இருக்கும்.அவருடைய தர்மமார்க்கத்தை எவ்வளவு புகழ்ந்தாலும்தகும். அவருடையபுகழ் பாரதவர்ஷத்துக்கே ஒருபுகழ்என்றுசொல்லலாம். அப்படிப்பட்டதன்யரை, வரவேற்கும் பாக்யம் நமக்குக்கிடைத்ததுபற்றி நான்மிகவும் சந்தோஷப்படுகிறேன். பகவான், கீதையில்சுதர்மத்தைப்பற்றி அழகாகச்சொல்லியிருக்கார். அந்தச்சுதர்மத்தை, நிலைநாட்டத்தனது சொந்தமகனையும் விட்டுப்பிரியத்துணிந்த, மகானைத்தரிசித்தும், அவருடைய மனஉறுதியைப்பாராட்டியும், மகாஜனங்கள் சீரும் சிறப்பும் பெறுவார்கள். இவருடைய புத்ரனும், கெட்டகிரஹம் மாறி நல்லகிரஹம் உதித்ததும், குலத்தைக்கெடுத்து, உத்தமமான தகப்பனாரின் மனதைப்புண்படுத்திய பாபத்தை எண்ணி வருத்தமடைந்து, பிறகு, தானாகவீடுவந்துசேர்ந்து, தகப்பனார்காலில்விழுந்து சேவிக்கத்தான் போகிறான். சத்யம் ஜெயிக்கும்என்பது சாமான்யாளுடைய வாசகமோ! ஆகவே உத்தமோத்தமரான சீமான் செட்டியாரை, நான்ஆசீர்வதித்து, இந்த ஊர் சத்சங்கத்தார்சார்பில், அவருக்கு இந்தமாலையைச் சூட்டுகிறேன். ஜே, சீதாராம்! ஜே, ஜே!!"

* * *

ரோஜாமாலை, சாதாரணமாகக் கோயில்களில்மூலவருக்குப்போடுவதுபோல, மிகப்பெரிதாகத்தான் இருந்தது. நெற்றியிலே விபூதிதரித்துக்கொண்டு, மார்பிலேநூலுடன், விலையுயர்ந்த பட்டுக்கரைவேட்டி, உத்தரியம் அணிந்துகொண்டு, அந்த ரோஜாமாலையுடன் நின்று, சபையோரைநோக்கிக் குழந்தைவேலச் செட்டியார், கும்பிட்டுக்கொண்டு, நின்றபோது,நாயன்மார்போலவே இருந்தது. தாழையூர் சத்சங்கம், சனாதனமார்க்கத்தைப் பாதுகாக்க ஏற்பட்டது. அந்தச் சங்கத்தார், வெளியூரிலிருந்து வரவழைத்திருந்த வக்கீல் வாசுதேவசர்மா, உருக்கமான அந்தப்பிரசங்கத்தைச்செய்து விட்டு, ரோஜாமாலையைச் செட்டியாருக்குப்போட்டதும், அவர் அடைந்த ஆனந்தம், இவ்வளவு என்று அளவிட முடியாது. வார்த்தைகள் சந்தோஷத்தால், சரியாக வெளிவரவில்லை.

"பிராமணோத்தமர்களே! பிரம்ம, க்ஷத்திரிய, வைஸ்ய, சூத்ர, என்று பெரியவர்கள் ஏற்பாடு செய்திருக்கும் ஜாதிஆச்சாரமுறைப்படி, அடியேன் வைஸ்யகுலம். இந்தப்பாவியின் மகனாகப்பிறந்தவன், அந்த ஆச்சாரத்தைக் கெடுக்கத் துணிந்தான். பிரபஞ்சத்துக்கே நாசம்சம்பவிக்கக்கூடியது அதர்மம். அந்த அதர்மத்தைச்செய்ய, ஒருமகன் எனக்குப்பிறந்தான், நான் என்ன பாபம் செய்தேனோ, பூர்வத்தில். அவள் என்னஜாதியோ, என்ன குலமோ, ஒருபெண், அவளைக்கலியாணம்செய்துகொள்ள வேண்டுமென்றான், தடுத்தேன், எவ்வளவோ புத்திசொல்லிப்பார்த்தேன், கேட்கவில்லை. கடைசியில், இந்தப் பாபக்கிருத்யத்துக்கு உடந்தையாக இருக்கும் மகாபாபம் நமக்குச்சம்பவிக்கக்கூடாது என்று தோன்றிற்று. நமது சர்மாஅவர்கள் சொன்னது சத்யவாக்கு. எனக்குப் புத்ரசோகம் தாங்க முடியவில்லை. ஆனாலும், மனதைத் திடப்படுத்திக்கொண்டு, அவனை வீட்டைவிட்டுப் போய்விடச் சொல்லிவிட்டேன். இனி அவன் எக்கேடுகெட்டாலும், உலகம்என்னைத்தூற்றாது. அவனுடைய முகாலோபனம் செய்யப் போவதில்லை என்று சங்கல்பம் செய்துகொண்டதுமட்டுமல்ல, என் சொத்திலே ஒருபைசாகூட அந்தநீசன் அடையப்போவதில்லை. ஏதோபகவத்சங்கற்பத்தால், நான் கொஞ்சம் சம்பத்து அடைந்திருக்கிறேன். அதை இனிச்,சத்காரியங்களுக்குஉபயோகித்து, போகிறகதிக்கு நல்லது தேடிக்கொள்வது என்று முடிவு செய்துவிட்டேன். என்சொத்து, சுயார்ஜிதம். ஆகவே அந்தத்துஷ்டன், என்னிடம் வரமுடியாது. என்னைப்பிரமாதமாகப் புகழ்ந்தசத்சங்கத்தாருக்கு, என்நமஸ்காரத்தைக்கூறிக்கொண்டு, இனிஉங்களுடைய ஆசீர்வாத பலத்தால் அடியேன், தன்யனாவேன் என்றும் சொல்லிக்கொள்கிறேன். யோக்யமான சேவைசெய்துவரும் சத்சங்கத்தாருக்கு,என்சக்தியானுசாரம், ஏதாகிலும் தரவேண்டும் என்று ஆசை. ஆகவே, ஆயிரம் ரூபாய் கொண்ட இந்தப்பணமுடிப்பை, சத்சங்கத்தாருக்குத் தருகிறேன்" என்றுகூறி, பணமுடிப்பையும் தந்தார். அந்தப்பரமபாகவதரை, மறுபடி ஒருமுறைஆசீர்வதித்தார்வாசுதேவசர்மா.அன்றுதாழையூர் மகாஜனங்கள், செட்டியாரைப்புகழ்ந்தனர், சத்சங்கத்திலிருந்து அவர் மேளதாளத்துடன் ஊர்வலமாக வீடுவரை அழைத்துச் செல்லப் பட்டார்.

* * *

தாழையூர் சத்சங்கத்தின் விசேஷக் கூட்டம்அன்று விமரிசையாக

## அந்திச் செந்தீ!

(மு. பெரியசாமி)

அந்தியிலே மேல்திசையை நோக்கிநின்றேன்—இந்த
அவனியெலாம் தங்கமயம் ஆகக்கண்டேன்—கரு
மந்தியின்றன் தாடையெனச் செக்கர்வானம்—என்
மதிமயக்கப் பிரமித்து நினைவடைந்தேன்—இதந்து
முந்தியெலாம் தமிழ்க்கவிஞர் இதனைப்பார்த்து—எழில்
முடியினையே தொட்டதமிழ்ச் சித்திரத்தை—நன்கு
தந்திருந்தார் எனினும்என் சிந்தனையில்—தோன்றித்
தளிர்விட்ட எண்ணமதைச் சொல்வேன் தம்பி!

பஞ்சணையில் நம்அன்னை சாய்ந்திருந்தாள்—கதிர்
மணிமுடியில் அகநூல்கள், புறப்பாட்டுக்கள்—இன்னும்
மிஞ்சியுள பழங்கவிதை அத்தனையும்—தளிர்
மேனியெலாம் ஒளிசொரிய வாழ்ந்தகாலை—ஒரு
வஞ்சகமே நெஞ்சகத்தில் கொண்டகூட்டம்—நச்சு
வாளிபல அன்னையின்மேல் பொழிந்ததோஷம்!—அவள்
பஞ்சனைய மேனியெலாம் குருதிஆச்சு—அதைப்
பார்த்தேன்நான் பரிதிமறை வேளைதன்னில்

நம்மவர்க்குத் தனியான கலைஒன்றுண்டு—தனி
நயவாழ்வு, நல்லஇனப் பண்புமுண்டு—எனில்
செம்மையுற நம்மினத்தைப் பாடிப்பாடி—அதன்
சிறப்பினிலே திளைத்திருத்தல் ஒழித்துவிட்டு—சிலர்
நம்மவரை, நம்அரசை இழிவுசெய்து—வால்
நார்களென இரக்கமிலா அரக்கராக—வேத
மும்முரமாய் காவியத்தைச் செய்துவிட்டார்—அதற்கு
முடிவுசெய்வோம், இனிமேலும் சகியோம், தம்பி!

அந்தியிலே காணுகின்ற விண்ணின்செம்மை—தமிழ்
அன்னைஅவள் சிந்தியசெங் குருதிவண்ணம்—நம்மைச்
சந்தியெலாம் சிரித்திடவே ஏடுசெய்தார்—இந்தச்
சகத்திலேலாம் சிறந்ததோரு புலவரென்று—வேத
தந்திரமாய்ப் பண்டிதர்கள் சொன்னபோதும்—தீ
தனைலேற்றி அவர்நூலைச் சாம்பலாக்கு—மானம்
முந்திடவே வாழவதைத் தமிழன்வேண்டான்—அந்த
முறைகெட்டார்க் கிவ்வாறு சொல்வாய் தம்பி!

நடைபெற்றது. உள்ளூர் வெளியூர் பிராமணத் தலைவர்களும், சனாதனிகளான மற்ற வகுப்புப் பெரியவர்களும், இலட்சாதிகாரியும் வைதிகப் பிரியருமான ஸ்ரீமான் குழந்தைவேல் செட்டியாரைப் பாராட்டக் கூடினர். செட்டியார்மீது சத்சங்கத்தின் ஆசீர்வாதம் விழுந்ததற்குக் காரணம், அவர் சனாதனக்கோட்பாட்டைச் செயல் முறையிலே நிலை நாட்ட, தன் ஒரே மகனையே, வீட்டை விட்டு வெளியேற்றியதுதான். மகன் பரமசாது, ஆனால் சீர்திருத்தவாதி. வேறோர் குலப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள வேண்டுமென்றான், செட்டியார் தடுத்தார், மகன் கேட்கவில்லை, ஜாதி ஆச்சாரத்தைக் கெடுக்கும் பிள்ளைஎன் வீட்டுக்குத்தேவையில்லைஎன்று துரத்திவிட்டார்.

* * *

தாழையூர்

அன்புள்ள அம்சாவுக்கு,

உனக்குக் கடிதம் எழுதவேண்டும் என்று பல நாட்களாக யோசித்து யோசித்து, கடைசியில் இன்று எழுத உட்கார்ந்தேன். "உனக்காவது கலியாணம் நடக்கப் போவதாவது. உன்னுடைய கொள்கைகளைக்கட்டிக்கொண்டு நீ அழவேண்டியவளேதவிர, ஊரிலே நாலு பேரைப்போல, காலா காலத்தில் கலியாணம் செய்துகொண்டு சந்தோஷமாக இருக்கப் போவதில்லை. நீதான், எந்த ஜாதியானாக இருந்தாலும் சரி, காதலித்தவனைத் தான் கலியாணம் செய்துகொள்வது, அதிலேயும், ஐயர் இல்லாமல் செய்துகொள்வது என்று கூட்டங்களிலே பேசுகிறாயே! அது எப்படியடி நடக்கும்" என்று என்னைக் கேலி செய்தபடி இருப்பாயல்லவா? அடி முட்டாளே! கேள்! உனக்குக் காதலைப் பற்றிக் கடுகுப் பிரமாணமும் தெரியாது. இப்போதாவதுதெரிந்துகொள், என் சபதம் நிறைவேறிவிட்டது. அடுத்த வெள்ளிக்கிழமை எனக்குக் கலியாணம்! ஐயர், நுழையவே முடியாத இடத்தில். சிங்காரபுரிச் சேரியிலே உள்ள சீர்திருத்தச் சங்கத்திலே கலியாணம்! யார் தெரியுமா? என் மாமனாரைப் பார்த்தால், பக்தையானநீ கீழே விழுந்துவிழுந்து கும்பிடுவாய், அவ்வளவு சிவப்பழமாக இருப்பார். தாழையூர் தனவணிகர் குழந்தைவேல்செட்டியார் என்றால், எந்தக் கோயில் அர்ச்சகரும், "மஹா பக்திமானல்லவா" என்று ஸ்தோத்தரிப்பார்கள், அப்படிப்பட்டவர் தவம் செய்து பெற்ற பிள்ளைதாண்டி, என் கணவர்; பெயர், பழனி!

அவர், என்னை வெற்றிகொள்ள அதிகக் கஷ்டப்படவில்லை. எப்போதாவது ஒரு தடவை, சீர்திருத்தச் சங்கத்துக்கு வருவார், அதிகம் பேசமாட்டார், மற்றவர்கள் பேசும்போது, மிகக் கவனமாகக் கேட்பார், அதிலும் நான் பேசும்போது, ஆனந்தம் அவருக்கு, மெள்ள மெள்ள நான் அவரைச் சீர்திருத்தக்காரராக்கினேன். ஆரம்பத்தில் அவர் ஜாதிச் சண்டை, குலச்சண்டை கூடாது; வேறு வேறு ஜாதியாகஇருந்தாலும், சண்டைசச்சரவு இல்லாமல்வாழவேண்டும் என்று மட்டுமே கூறிவந்தார். நாளாகநாளாக, தீவிரவாதியானார். நான் என் பேச்சினால், அவரை வென்று விட்டேன், அந்தப் பெருமையும் சந்தோஷமும் எனக்கு! அவரோ, தன் பார்வையாலேயே, என்னை வென்று விட்டார். குழந்தைபோன்ற உள்ளம் அவருக்கு. சாதாரணமாகப் பல ஆடவருக்கு உள்ள குறும்புப் பார்வை, குத்தலான பேச்சு இவை கிடையாது. "மிஸ்டர் பழனி" என்று நான் தைரியமாகஅவரைக்கூப்பிடுவேன். அவரோநாகவல்லிஎன்றுகூடத்தைரியமாகஎன்னைக் கூப்பிடமாட்டார். புன்சிரிப்புடன் என் அருகேவருவார், அவ்வளவுசங்கோஜம், ஆனால், அவருடைய காதலைக் கண்கள் நன்றாக எடுத்துக் காட்டியபடி இருந்தன. துணிந்து ஒரு தினம் கேட்டார், நான் திடுக்கிட்டேன், அவர் கேட்டாரே என்பதால் அல்ல, அந்தக்கேள்விஎன்மனதிலே எழுப்பிய களிப்பைக்கண்டு!

"நான் என்ன ஜாதி? நீங்கள் சைவச்செட்டிமார் குலம்!" என்று நான் கூறினேன். அவர், நான் அடிக்கடி சங்கத்திலே ஜாதியைக் கண்டித்துப் பேசுவேனே, அந்த வாதங்களை அழுத்தந் திருத்தமாகக் கூறினார். அன்று மாலை மணி ஆறு இருக்கும். அம்சா! என்ன இருந்தாலும் இந்த ஆண்களே கொஞ்சம் அவசரக்காரர்கள்தான். பேச்சு நடந்து கொண்டே இருக்கையில் அவர், திடீரென்று என்னை ஆரத்தழுவிக் கொண்டார், எதிர்ப்பவர்களின் வாதங்களைத் தவிடுபொடியாக்கும் திறமைகொண்ட நான், பைத்தியம் போல ஐயோ! விடுங்கள்! யாராவது வந்து விட்டால்! என்று குழைந்து கூறினேன். நல்ல வேளை, பழனி, என் பேச்சைக் கேட்கவில்லை! எமது அதரங்கள் ...............சகஜந்தானேடி! பிறகு அவர் ஒவ்வொரு மாலையும் வர ஆரம்பித்தார். காலையிலே நான் பள்ளிக்கூடத்தில் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுக்கும் போதெல்லாம் அன்று மாலை அவர் என்ன பேசுவார், என்னென்ன விதமாக விளையாடுவார் என்று நினைத்தபடியே இருப்பேன். வங்காளத்துக்குத் தலைநகரம் எது? என்று கேட்கவேண்டும், நானே கல்கத்தாவுக்குத் தலை நகரம் எது என்று கேட்பேன். என் வகுப்பிலேயே புத்திசாலி வனிதா, அவள் எழுந்திருந்து "கேள்வியே தவறு" என்றாள். எனக்குக் கோபம் பிரமாதமாக வந்தது. பிறகு, என் தவறை உணர்ந்து நானே சிரித்து விட்டேன். சிரித்ததும் எனக்கு அவருடைய கவனம் தான் வந்தது. ஏன் தெரியுமா? நீ குறும்புக்காரி, உன்னிடம் கூறமுடியாது!

எங்கள் காதல் வளர வளர, அவர் வீட்டிலே, சச்சரவு வளர்ந்தது. ஜாதி குல ஆச்சாரத்திலே, ஐயர்மார்கள்தவறிவிட்டதாலேயே காலா காலத்தில் மழை பெய்வதில்லை என்று எண்ணுபவர் என் மாமனார். அதற்குப் பரிகாரமாக, மற்ற ஜாதியார் தத்தம் ஜாதியாச்சாரத்தைச் சரியாகக் கவனிக்க வேண்டும் என்று கூறுபவர். அப்படிப்பட்ட கைலாய பரம்பரைக்காரர், சிலுவையின்தயவால் கிருஸ்தவளான சேரிப் பெண்ணைத் தன் மகன் கலியாணம் செய்து கொள்ளச்சம்மதிப்பாரா? வீட்டிலேபுயல் அடித்தது. அவர், என் காதலர், தகப்பனார் போடும் கோட்டைத் தாண்டுபவரல்ல. ஆனால் காதல் ராஜ்யத்திலே, என் மாமனாருக்குக் கோடு போடும் அதிகாரம் ஏது? தமக்குச்சம்பந்தமில்லாதஇலாக்கா என்பதை அவர் மறந்து விட்டார். அதன் விளைவு என்ன தெரியுமா? தந்தை-மகன் என்ற சம்பந்தமே அறுபட்டுப் போய்விட்டது. அந்தக் கிருஸ்தவச் சிறுக்கியைக் கல்யாணம் செய்துகொள்வதானால் என் முகாலோபனம் செய்யக்கூடாது. இனி நீ என் மகன் அல்ல. நட வீட்டை விட்டு, என்று கூறி விட்டாராம். பழனி எங்கள் கிராமத்துக்கே வந்து விட்டார். இரண்டு மைல்தான் இருக்கும் தாழையூருக்கும் சிங்காரபுரிக்கும். ஆனால், இரண்டு மைலை அவர் தாண்டும்போது, ஒரு உலகத்தை விட்டு மற்றோர் உலகுக்கே வந்து சேர்ந்தார் என்றுதான் அர்த்தம். அடி அம்சா! அந்த உலகிலே, என் காதலருக்கு மாளிகை இருக்கிறது, வைரக்கடுக்கன் இருக்கிறது, தங்க அரைஞாண் இருக்கிறது, இரும்புப் பெட்டியிலே இலட்சக் கணக்கிலே, கொடுக்கல் வாங்கல் பட்டி இருக்கிறது, இரட்டைக் குதிரைச் சாரட்டும், கூப்பிட்ட குரலுக்கு ஓடி வரும் ஆட்களும், உள்ளனர். இரண்டேமைல் தாண்டிஇங்கேவந்தார்; என்ன இருக்கிறது? என்னுடைய பழையவீடு! தோட்டத்திலே பூசினிக்கொடி! தெருக்கோடியில் ஒரு வெறி நாய், இவ்வளவுதான்!

கண்ணாளா! என் பொருட்டு ஏனோ இந்தக்கஷ்டம்? என்று நான் கனிவுடன் கேட்டேன், அவரோ, 'ஒருவருடன் வாதாடிப்பாதி உயிர் போயிற்று, இனி உன்னிடமும் வாதாட வேண்டுமா?' என்று கேட்டார். எவ்வளவோ செல்வத்தை என் பொருட்டுத் தியாகம் செய்த அந்தத் தீரரை நான் என்ன போற்றினாலும் தகும். என் அன்புக்கு ஈடாகாது அந்த ஐஸ்வரியம் என்றார், என் கண்ணொளி முன் வைரம் என்ன செய்யும் என்று கேட்டார், உன் ஒரு புன் சிரிப்புக்கு ஈடோ, என் தகப்பனாரின் பெட்டியிலே கிடக்கும் பவுன்கள் என்றார், ஒவ்வொரு வாசகத்துக்கும் முத்தமே முற்றுப்புள்ளி! காதலர் இலக்கணம் அலாதி அல்லவா! உன்னிடம் சொல்கிறேனே நான். நீயோ, மரக்கட்டை!

கடைசியில், சிங்காரபுரியிலேயே அடுத்த வெள்ளிக்கிழமை கல்யாணம் என்று நிச்சயமாகி விட்டது. யாராரோ தடுத்துப் பார்த்தார்கள் அவரை. முடியவில்லை. தாழையூர் கொதிக்கிறது. என் மாமனார் தற்கொலைசெய்துகொள்ளக்கூடநினைத்தாராம், ஆனால் ஏதோ ஒரு சிவபுராணத்திலே, ஆண்டவன்கொடுத்த உயிரை அவராகப் பார்த்து அழைக்கு முன்னம் போக்கிக்கொள்வது மகா பாபம் என்று எழுதியிருக்கிறதாம். இல்லையானால் இன்னேரம் எனக்கு மாமனாரும் இருந்திருக்கமாட்டார், மாமி காலமாகி ஏறக்குறைய 5 வருஷங்களாகின்றனவாம். பழனிக்கு வயது, 22, அதாவது என்னைவிட 3 வயது பெரியவர் (என் வயது 19 என்று அவரிடம் சொல்லி வைத்திருக்கிறேன்!) வெள்ளிக்கிழமை நீ அவசியம் வரவேண்டும். அதற்காகத்தான் இவ்வளவு நீண்ட கடிதம். இன்னும் கூட ஏதாவது எழுதலாமா என்று தோன்றுகிறது. முடியாது? அதோ அவர்!

உன் அன்புள்ள,

**நாகவல்லி.**

* * *

"என்னைச் சித்திரவதை செய்வது, அதற்குப்பெயர், காதல்—ஏண்டா தம்பீ! காதல்தானே! பெற்றெடுத்தகப்பனைக்கூட எதிர்க்கச் சொல்கிறதாடா அந்தக்காதல்! ஊரிலே, உலகத்திலே, எவனுக்கும் ஏற்பட்டதில்லைக்காதல், உனக்குத்தானே முதலிலே உதித்தது அந்தக் காதல், என் உயிருக்கு உலை வைக்க."

"நான் தங்கள் வார்த்தையைஎப்போதாவது மீறி நடந்ததுண்டா?"

"மீறி நடப்பவன் மகனாவானா?"

"இது எனக்கு உயிர்ப்பிரச்னையப்பா?"

"படித்ததைஉளறுகிறாயா? இல்லை அந்தக் கள்ளிகற்றுக் கொடுத்த பாடத்தை ஒப்புவிக்கிறாயா? எனக்குக்கூடத் தெரியுமடா, அழுவதற்கு! தலைதலை என்றுஅடித்துக்கொண்டு, ஒரு திருஓட்டைக் கையிலே எடுத்துக்கொண்டு எங்காவது தேசாந்திரம் போகிறேன். நீதிருப்தியாக வாழ்ந்துகொண்டிரு அந்தத்திருட்டுச்சிறுக்கியுடன். ஈஸ்வரா! எனக்கு இப்படிஒருமகன்பிறக்கவேணுமா, மானம் போகிறதே! தாழையூரிலே தலைநிமிர்ந்து நடக்க முடியவில்லையே. அடே! நீ அவளைக்கலியாணம் செய்து கொள்ளத்தான் வேண்டுமா? ஒரேபேச்சு, சொல்லிவிடு, என்சொல்லைக்கேட்கப்போகிறாயா, இல்லை, அவளைத்தான் கலியாணம்செய்தாகவேண்டுமென்று கூறுகிறாயா? இரண்டில் ஒன்று சொல்லிவிடு"

"நான், நாகவல்லியைத் தவிர வேறோர் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ளமுடியாதப்பா"

"செய்துகொண்டால் அவளைக்கலியாணம் செய்துகொள்வது, இல்லையானால்பிரம்மச்சாரியாகவேஇருந்துவிடப் போகிறாயா! சரி! நீபிரம்மச்சாரியாகவே இருந்துதொலை. உனக்கே எப்போது பித்தம் குறைகிறதோ, அப்போது பார்த்துக் கொள்வோம்..........."

"அப்பா! நான் நாகவல்லிக்கு வாக்களித்துவிட்டேன்."

"தகப்பன் உயிரை வாட்டுகிறேன் என்றா?"

"இன்னும் ஒருவாரத்தில் அவளைக் கலியாணம் செய்துகொள்வதாக"

"பழனி! நட, இந்த வீட்டை விட்டு, என்னை, இதுவரை, சம்மதம் தரவேண்டும் என்று என்

(8-ம் பக்கம் பார்க்க)

மூல வியாதிகளுக்கு யௌவன பிராஷ்

கருணைக்கிழங்கு லேகியம்! ஆப்ரேஷன் பயன்தராது

மூல முளைகள், ரத்தம், சீழ்வடிதல், குத்து, வலி, மலபந்தம், வாய்வு பவுத்திரக் கட்டிகள், 3-வேளை மருந்தில் உபத்திரவங்கள் தணிந்து சுகம் காணலாம். இதுபோல்எந்த மருந்திலும் சுகம் காணமுடியாது.

12 நாள்யௌவன பிராஷ் ரூ. 3 சரஸ்வதிவைத்தியசாலை பழனி, S. I.

ஸ்டாக்கிஸ்ட்ஸ்:—

T. N. சொக்கலிங்கம்பிள்ளை மருந்து ஷாப் மதுரை.

தி. மெடிகல் & ஜெனரல் ஸ்டோர்ஏஜன்ஸி பொள்ளாச்சி.

R. S. வாசன் & Co கெமிஸ்ட் திருப்பூர்.

சரஸ்வதி மெடிக்கல் ஸ்டோர், நாமக்கல்.

ராஜம் விலாஸ்

கைத்தறி ஜவுளிகள் -:- கலர் புடவைகள்

உயர்தர ரகங்கள்! உத்தரவாத ஜரிகை!!

80, 100 நெ. நூல்களால் தயாரிக்கப்பட்டவை!

ஒருமுறை விஜயம் செய்யுங்கள்

ராஜம் விலாஸ்,

சின்ன ஸௌராஷ்டிரா தெரு, உறையூர் P.O. திருச்சி.

# அடைத்த கதவு திறந்த அதிசயம்

[ஈழத்தடிகள்]

திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசரோடு திருமறைக்காட்டுக் (வேதாரணியத்திற்)குப் போயிருந்தகாலத்தில், அவ்வூர்க்கோயிற் கதவு அடைக்கப்பட்டுக் கிடந்ததாம். கதவு யாரால் அடைக்கப்பட்டதென்பதற்கு,

> "..........................................
> முன்னுள், படியின்மறை அருச்
> சித்துக் காப்புச் செய்தபைம்
> பொன் மணித் திருவாயில்......
> .........................................."

என்று சேக்கிழார் விளக்கம் கூறியுள்ளார், அதாவது, திருமறைக்காட்டுக்குச் சென்ற சம்பந்தரும் அப்பரும், அவ்வூரவர்களை நோக்கி, அக்கதவு அடைபட்டதன் காரணத்தை வினவ, அவர்கள், "இத் திருக்கதவை வேதங்கள் பூசித்துத் திருக்காப்புச் செய்தன" என்று கூறியதோடு, "அன்று தொட்டு இது மூடப்பட்டு இருக்கிறது, அவ்வேதம் ஓதித் திறப்பார் ஒருவரும் இங்கே வரவில்லை. தொழுகைக்குச் செல்வோர்வேறுஒரு வாயில்கோலி அதன் வழியாகச் செல்கிறார்கள்" என்றும் சொன்னார்கள் என்பதாகச்சேக்கிழார் கூறியுள்ளார்.

மறைக்காட்டுக் கோயிற் கதவு வேதங்களால் மூடப்பட்டதென்பது இயற்கைக்கு மாறான ஒரு நிகழ்ச்சியாக இருக்கிறது. வேதங்கள் என்பது, எழுத்துக்களான சொல் அல்லது சொற்றொடராகும். எழுத்துக்கள் கடவுளைப்பூசிப்பதும், கோயிற் கதவுகளை அடைத்துப் பிறரால் திறக்கமுடியாதபடிசெய்வதும்முடியக்கூடிய செயலா? சிறிதளவாவது அறிவோடு தொடர்புபடுத்தி ஒப்புக்கொள்ளக்கூடிய நிகழ்ச்சியா என்பதனைக்கூட எண்ணிப் பாராமல், "வேதங்கள் கதவைத்திருக்காப்புச் செய்தன" என்ற செப்படிவித்தை செய்துகாட்டும் சேக்கிழாரையும், அவர் வழி செல்வோரையும் என்னென்பது! 'அற்றன்று; நீர் கூறுவது பொருந்தாது; வேதங்கள் கதவைத்திருக்காப்புச் செய்யவில்லை; வேதவிற்பன்னரே அங்ஙனம்செய்தனர்' என்று பொருள் கொள்வதற்கும் இல்லையே!

> "மறை அருச்சித்துக் காப்புச் செய்த"

என்று மிகத்தெளிவாகவும்விளக்கமாகவும் ஒருசிறிதும் ஐயுறவுக்கு இடமின்றியும், அச்சொற்றொடரில் புதைபொருளோ மறைபொருளோ இருக்கிறதென்று எடுத்துக்காட்ட முடியாதபடியுமன்றே, கூறப்பட்டிருக்கிறது. இச்சொற்றொடருக்கு உரை செய்த கலியாணசுந்தரனாரும், "இத்திருக்கதவை வேதங்கள் பூசித்துத் திருக்காப்பிட்டன" என்றே பொருள் விரித்திருக்கிறார். "திருக்காப்பிட்டன" என்றில்லாமல், 'திருக்காப்பிட்டனர்' என்றுஇருந்தாலாவது, கதவடைபட்டது, வேதங்களால் அல்ல; வேதங்களை ஓதியவர்களால்தான் என்று ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் அவ்வாறு பொருள் கொள்வதற்கு இடமில்லாது செய்துவிட்டனர் நூலாசிரியரும் உரையாசிரியரும். இந்தநிலையில், வேதங்கள் கதவைத்திருக்காப்புச்செய்தனவென்றவெற்றுரையை எப்படி ஒப்புக்கொள்ள முடியும்!

இன்றைய படக்காட்சிகளில்; (சினிமாவில்) பார்ப்பவர் ஆச்சரியப்படும்படியானபல அற்புதங்கள் (Tricks) காட்டப்படுவதுண்டு. அவற்றுள், ஒருபெயரைக் குறிக்கும் எழுத்துக்கள், எங்கிருந்தோ ஒன்றன்பின் ஒன்றாகத் தாமாகவே ஓடிவந்து ஒருங்கு சேர்ந்து அப்பெயரை உண்டாக்குவது போலவும், அடைபட்டிருக்கும் கதவின் பூட்டுத்தானகவே திறபடுவது போலவும் காட்டப்படுவதுண்டு. இவை, மக்களின் அறிவும் முயற்சியும்உழைப்பும் பயன்படுத்தப்பட்டு, அவர்களால் கண்டுபிடிக்கப்பட்ட பொறி (இயந்திரங்)களின் உதவியால் நிகழ்கின்றனவென்பது எவராலும் மறுக்கமுடியாத உண்மையாகும். ஆனல் இங்கு பேசப்படும் புதுமை, அறிவுக்கும்இயற்கைக்கும் ஒருசிறிதும் பொருந்தாததாகவே கூறப்பட்டுள்ளது. மக்களால் செய்யப்படும் ஒருசெயலை எழுத்துக்களாலான வேதங்கள் செய்தன என்று கூறும் விந்தையை இந்தியா என்று சொல்லப்படும் இவ்வுபகண்டத்திலன்றி வேறெங்கேனும் காண முடியுமா?

இனி, வேதங்களால் அடைக்கப்பட்ட கதவுஎப்படித் திறக்கப்பட்டதென்பதையும் ஒரு சிறிது ஆராய்வாம். மறைக்காட்டுக்குச் சென்ற சம்பந்தரும் அப்பரும் அக்கதவைத் திறக்கவேண்டுமென்று எண்ணினர்கள். சம்பந்தர், அப்பரை நோக்கி, 'அப்பரே!நீர் இக்கதவு திறக்கப் பாடும்' என்றாராம். உடனே அப்பர், "பண்ணினேர்" என்றெடுத்துக் "கண்ணிணைல் உமைக்காவக் கதவினைத்திண்ணமாகத் திறந்தருள் செய்ம்மினே" என்று பாடினாராம். கதவு திறபடவில்லை. மேலும் பாடினர், கதவுதிறந்தபாடில்லை, ஒன்றிரண்டல்ல, ஒன்பது பாடல் பாடினர், அப்பொழுதும்கதவுதிறபடவில்லை. திருநாவுக்கரசருக்குக் கோபம் வந்துவிட்டது. "நான்இத்தனை பாடல்கள்பாடியும் கதவு திறக்க அருள்செய்யாத அம்மையப்பனே உனக்குக் கொஞ்சமும் இரக்கமென்பதில்லையா?" என்று கேட்கும் முறையில்,

> "..........................................
> இரக்கமொன்றிலீர்......................
> ..........................................
> சரக்க இக்கதவந் திறப்பிம்மினே"

என்ற தேவாரத்தைப் பாடினர். உடனே கதவு திறபட்டதாம். அன்பையும் இரக்கத்தையுமே வடிவமாகக் கொண்ட இறைவன், தன்னிடம் இரக்கம் இருக்கிறதென்பதைத் தெரிவிக்கும் முறையில், அப்பர் 'இரக்கமொன்றிலீர்' என்று பாடிய உடனே அந்தக்கதவைத் திறந்து விட்டாராம்! எப்படிப்பட்ட கதவு? வேதங்களால் பூசிக்கப்பட்டுத் திருக்காப்பிட்டகதவு! மக்களால் அடைக்கப்படாமல் மறையால் (வேதத்தால்) அடைக்கப்பட்ட கதவு! மகேசுவரனருளால் திறக்கப்பட்டது! எப்படிப் பட்ட மகேசுவரன்? இரக்கமொன்றிலா அரக்கனை (இராவணனை) மலையின் கீழ் வைத்து அழுத்திய 'இரக்க' முடைய இறைவன்! எப்பொழுது கதவைத் திறந்தார்? 'உமக்கு இரக்கமென்பது ஒன்றில்லையா?' என்று கேட்டபின்னர். யார்இப்படிக் கேட்டது? இரக்க மொன்றில்லா அரக்கன் வழிவந்த அப்பர். அப்பர் தமிழன். இராவணனும் தமிழன். இராவணன் இரக்கமொன்றில்லா அரக்கன். அவன்வழிவந்த அப்பரும் அப்படித் தானே இருந்திருப்பார்! எனவேதான், இரக்கமே வடிவான இறைவனைநோக்கி, 'உமக்கு இரக்கமென்பது ஒன்றில்லையா?' என்று கேட்டார். உடனே இறைவன், "இரக்கமில்லாத அரக்கர் கூட்டம், இரக்கமே வடிவான என்னைப்பார்த்தா இப்படி கேட்பது" என்று கோபித்து, 'இதோ எனக்கிருக்கும் இரக்கத்தைப் பார்' என்று கதவைத்திறந்து, தமக்கிருக்கும் 'இரக்கமேம்பாட்டினை' எடுத்துக்காட்டிற்று. இதனைக்கண்டு இறும்பூதெய்திய அப்பர், தம்முடன் வந்தசம்பந்தரையம் அழைத்துக்கொண்டு கோயிலுட் சென்று, இரக்கமே உருவானஇறைவனை வணங்கித் திரும்பினர். அப்பர், சம்பந்தரை நோக்கி, "இத்திருக்கதவு இப்போது திறக்கப்பட்டு விட்டது; இதனை இப்படியே விடுதல் கூடாது; திறக்கவும் அடைக்கவும் வழக்கத்தில் வர வேண்டும்; ஆகையால், நீர் இதனை அடைக்கப்பாடும்" என்றார். சம்பந்தர், "சதுரம் மறை" என்ற தேவாரத்தைப் பாடத்தொடங்கினர். உடனே கதவு அடைபட்டது. கதவு அடைபடுவதற்காகப் பாடத்தொடங்கிய உடனேயே கதவு அடைபட்டுவிட்டது. கதவு அடைபட்ட பின்னரே, அது அடைபடுவதற்காகப் பாடப்பட்ட பதிகம் முடிவடைந்தது. பதிகம் எதற்காகப் பாடப்படுகின்றதென்பதைக்கூடத்தெரிந்துகொள்ளும்பொறுமையை இழந்த 'அத்துணை இரக்கம்' வாய்ந்த இறைவன் உடனே கதவை அடைத்து விட்டார். அடைபட்டுக் கிடந்தகதவு திறபடு வதற்குப் பல்பாடல்களும் பெரு முயற்சியும் மனச்சோர்வும், திறபட்ட கதவை அடைப்பதற்கு எவ்வித தொல்லையுமின்றிப் பதிகம் பாடத் தொடங்கிய உடனேயே அடைபட்டதையும், அவற்றிற்குரிய காரணங்களையும் நாம் எண்ணிப்பார்க்க முயன்றால், கடவுளன்பர்களும் புராணப்பிரியர்களும் எம்மைக் 'கடவுள்விரோதிகள்.' 'புராணப்பகைவர்கள்' என்று சொல்லிவிடுவர். ஆனல், கதவைத்திறக்கப் பாடிய அப்பரே இவ்வாறு நிகழ்ந்ததைப் பற்றி எண்ணிமனம் நொந்திருப்பதாகப்பெரிய புராணத்திலேயே கூறப்பட்டிருக்கிறது.

கதவு திறப்பதற்குத் தாம்பட்டதொல்லையையும், அது அடைபடுவதற்குச் சம்பந்தர் எவ்வித தொல்லையும் படாமையையும் எண்ணிய அப்பர், கவலைமேலீட்டால், "நான் மறைகளும் சிவபெருமானல் அருளிச் செய்யப்பட்டன. அவைகளை வெளியிடும்உரிமைபாடுதிருஞானசம்பந்தசுவாமிகளுக்கே உண்டு. என் போன்றவர்க்கும் அவர்க்கும் உள்ள இடையீடு அதாவது வேறுபாடு மிகப் பெரிது" என்று நினைத்துக் கவலையோடு துயின்றார் என்று சொல்லப்பட்டிருக்கிறது, எப்படித் துயின்றார்? "என்ன! என்பாட்டிற்குக்கதவு அரிதில் திறக்கப்பட்டது; சம்பந்தர் பாட்டிற்கு அஃதுஎளிதில்மூடிக்கொண்டது" என்று அப்பர் கவலையுடன் மடத்தின் ஒருபக்கத்தில் உறங்கினாராம். உண்மையாகவே உறங்கினாரா? இல்லை. எப்படி உறக்கம் வரும்? கவலை மிகுதியால் நித்திரையின்றிக் கண்மூடிக்கிடந்தாராம். இவருடைய அந்த உறக்கத்தைச் சேக்கிழார் "பேழ்கணித்தல்" என்று குறிப்பிட்டுள்ளார். பேழ்கணித்தல் என்பதற்கு நித்திரையின்றிக் கண்மூடல் என்று பொருள் கூறப்பட்டிருக்கிறது. கதவு அடைப்பதும் திறப்பதுமாகிய ஒரே காரியத்தைச்செய்யப் புகுந்த தமக்கும் சம்பந்தருக்கும் இடையே, எல்லார்க்கும் பொதுவில் நடமிடுகின்றதாகச் சொல்லப்படும்சிவன் காட்டிய வேறுபாட்டையும், தம்மை இழிவு படுத்திச் சம்பந்தரை உயர்வுபடுத்திய கொடுமையையும் கண்ட அப்பர் மட்டுமல்ல, எந்த அறிவுள்ள தமிழனும் கவலைப்பட்டே இருப்பான். அப்பராவது கவலைப்பட்டதோடு நின்று விட்டார். ஒரே சமயத்தில்—ஒரே இடத்தில்—ஒரே நிகழ்ச்சிக்காக இருவர் எடுத்துக் கொண்ட முயற்சியில், ஒருவருக்கு ஒரு நீதியும், மற்றவருக்கு வேறொரு நீதியும் வழங்கிய கடவுளின் தொடர்பை, அறிவுள்ள எந்தத்தமிழனும் அன்றே—அப்பொழுதே அறுத்திருப்பான். ஆனல், அப்பர் அவ்விதம் செய்யவில்லை. அதற்குக்காரணம், அன்றைய சுற்றச் சார்பும் சூழ்நிலையும் அவரை அங்ஙனம்செய்யமுடியாதபடி தடுத்துவிட்டது போலும்! அது எப்படியிருந்தாலும், அன்று ஆண்டவன் அப்பருக்குக் கற்பித்தபாடம், இன்றுள்ள தமிழர்களை விழிப்படையச் செய்வதற்குத் துணைபுரிவது கண்டு நாம் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றோம்.

அப்பருக்கு அவரால் தாங்க முடியாத கவலைஏற்பட்டபொழுது, தனக்கும் சம்பந்தருக்கும் உள்ள வேறுபாடு மிகப் பெரிது என்று அவர் நினைத்ததைச் செயல் முறையிலும்அப்பொழுதே கண்டார். எப்படிஎன்றால், அப்பர்கவலையோடு உறங்கிக்கொண்டிருந்தசமயத்தில், சிவனார்அங்கேதோன்றி 'நாம்வாய்மூரில் இருப்போம்; எம்மைத் தொடர்வா" என்று சொன்னாராம். உடனே அப்பர் எழுந்து, "திருவாயமூர் செல்வனார்—அங் கேவாஎன்றுபோனார் அதென்கொலோ" என்று அச்சத்தோடுபாடிக்கொண்டுஅவர் பின்னே போனாராம். தமக்கு முன்னே போகின்றஆண்டவனை அப்பரால் அணுக முடியவில்லையாம். அப்பர் ஆண்டவனை அணைய முயன்று முயன்றுபார்த்தாராம். அவர் அணையப் பெற்றாரில்லையாம். உடனே ஆண்டவன் ஒரு கோயிலைக் காட்டி அதனுள்ளே போய் மறைந்து விட்டாராம். இதனைச்சேக்கிழார்,

> "சீரார் பதியினின் றெழுந்து,
> செல்லுந் திருநாவுக்கரசர், ஆரா
> அன்பில் ஆரமுதம் உண்ண எய்தா
> வாறேபோல், நீரார் சடையார்
> எழுந்தருள நெடிதுபின்பு செல்லு
> மவர், பேராளரை முன்தொடர்ந்
> தணையப் பெறுவார் எய்தப்பெற்றி
> லரால்"

என்ற பாடலால் விளக்கியுள்ளார். இஃதிவ்வாறாக, நித்திரையிலிருந்த சம்பந்தர், விழித்தெழுந்து, "அப்பர் எங் குற்றார்" என்று கேட்டாராம். அடியவர்கள், "அவர் திருவாய்மூருக்குப்போனார்" என்று சொன்னார்களாம். அப்பர், திருவாய்மூருக்குப்போனார் என்றசெய்தியை உறக்கத்திலிருந்த அடியவர்களுக்கு யார் கூறினார்களோ, தெரியவில்லை. கவலை மிகுதியால் உறக்கமின்றி இருந்த அப்பர், சிவனார் வந்து கட்டளையிட்டவுடனே புறப்பட்டு அவர் பின்னேபோனார்என்று சொல்லப்பட்டிருக்கிறதேயன்றி, அப்பர், தாம் திருவாய்மூருக்குச் செல்வதாகஅம் மடத்தில் உறங்கிக்கொண்டிருந்த அடியவர்களை எழுப்பிக்கூறியதாகப் புராணத்தில் சொல்லப்படவேயில்லை. என்றாலும் எப்படியோ இதனை அறிந்த உடனேசம்பந்தரும் புறப்பட்டுத் திருவாய்மூருக்குப் போனாராம். அங்கே கோயிலுக்கு வெளியே தனியாக நிற்கும் அப்பரைக் கண்டார். அப்பர் ஆண்டவனை நோக்கி, "உமது திருக்குறிப்பை அறியாது கதவைத் திறப்பித்த அடியேனுக்கு உம்முடைய திருவுருவை மறைக்கலாம்; ஆனல் உறைக்கப்பாடிக் கதவை அடைப்பித்த அன்பர் இங்கே போந்துள்ளார். அவருக்கும் மறைக்கலாமோ" என்று விண்ணப்பித்தார். உடனேதிருவாய்மூர்ச் சிவனார், சம்பந்தருக்கு மட்டும் காட்சியளித்தார். சம்பந்தர் அக்காட்சியை அப்பருக்கும் காட்டினர். இவை பெரிய

(6-ம் பக்கம் பார்க்க)



# திராவிட நாடு

காஞ்சி 24—3—46 ஞாயிறு


## முரண்பாடுகள் அல்ல.

பண்டித் ஜவஹர்லால், சிறை வைக்கப்பட்டார். 1942

பண்டித ஜவஹர்லால், வைசிராய் ஏற்பாடு செய்த விமானமூலம் மலாய் சென்று, அங்கு மவுண்ட் பேடன் பிரபுவுடன், மோட்டாரில் பவனிவந்தார். 1946

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் அறிக்கையைச் சர்க்கார், கண்டித்தனர். 1942

காங்கிரஸ் காரியக் கமிட்டியினர் உணவு சம்பந்தமாக வெளியிட்ட அறிக்கையைச் சென்னை சர்க்கார் ஆலோசகர் பொதுமக்களுக்குச் சிபார்சுசெய்கிறார். 1946

★

இவைகள், முரண்பாடுகள் அல்லவா? என்றே எவரும் கேட்பர். 'இல்லை' என்பதுதான், ஆராய்ந்த பிறகு அனைவரும் கூறவேண்டிய பதிலாக இருக்கும். இவை முரண்பாடுகள்போல் தோற்றமளிக்கும், ஏகாதிபத்யத் திருவிளையாடல்கள்! ராஜதந்திரத் திட்டங்கள்!

மலாயாவில், மவுண்ட் பேடன் பிரபுவுடன், பண்டிதஜவஹர்பவனி வந்த செய்திகேட்டு, பிரிட்டிஷாரின் முகம் சோகம் கப்பியதாக இருந்திருக்கும் என்று, இங்கு, அந்தச் செய்தியைக்கேட்டுக்களிப்புடன் காணப்படும் காங்கிரஸ்அன்பர்கள் கருதக்கூடும். உண்மை என்னவென்றால், ஏகாதிபத்ய ஏஜண்டும், ஏகாதிபத்ய எதிர்ப்புச் சக்தியின் தலைவரும், ஒரே மோட்டாரில் பவனிவந்தனர் என்ற செய்தி, இங்கு உண்டாக்கினதைவிட, அதிகமான சந்தோஷத்தை பிரிட்டனில் உண்டாக்கியிருக்கும். "வெள்ளையனே, வெளியே போ! என்று வீரமுழக்கம் செய்தாரே, அந்த நேருதான் இது! பக்கத்தில் இருப்பது,வெள்ளைக்காரர்,அதிலும் ஏகாதிபத்ய ஏஜண்டு, அதுமட்டுமல்ல ராஜகுடும்பம், மவுண்ட்பேடன் பிரபு பக்கத்தில் இருப்பவர்" என்று, படத்தைப் பார்த்துப் பிரிட்டிஷ் ஏகாதிபத்ய ராஜதந்திரிகள் பூரித்துப் போயிருப்பர்! இந்த ராஜோபசாரத்தை நேரு ஏற்றுக்கொண்டதன் மர்மம், அவர்களுக்குத் தெரியும், நம் மக்கள் அறியமாட்டார்கள். பயத்தால் வெள்ளைக்காரன் பணிந்தான் என்று நம் மக்கள் எண்ணிக் களிப்பர். பல நாடுகளைப் பலகாலமாகப் பிடித்தாட்டும் வெள்ளையனுக்குத் தெரியும் பிரிட்டிஷ் பசப்பும் பேரமும் பலித்துவிட்டது, என்பதைத்தான் அந்தப்படம் பாடமாகக் காட்டுகிறதுஎன்பது. முரண்பாடுபோலத் தோன்றும் இந்தச் செய்திகள், இந்திய உபகண்டத்தின் விடுதலை வரலாற்றிலே, நாம், ஒருமுக்கியமான கட்டத்திலே இருப்பதைக்காட்டுகின்றன. பளபளப்பான பாதை, ஆனால் வழவழப்பும் அதிகம்!

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின் கடைசி நாட்கள் ஆரம்பமாகிவிட்டன—இதனை மற்றவர்களை விட, பிரிட்டிஷார் மிகநன்றாக அறிவார்கள். உலகிலே, எந்தப்பகுதியிலும், பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக்கு,இடியும்ஏளனமும்,கண்டனமும் எதிர்ப்பும் ஏராளம். காரணமின்றி ஏற்படவில்லை இவ்வளவு எதிர்ப்பும். சூரியன் அஸ்தமிக்காத பரந்தசாம்ராஜ்யம் எம்முடையது என்று பெருமை பேசிக்கொண்ட பிரிட்டனில், இன்று கூர்ந்து நோக்கினால், ஒரு பரந்தசாம்ராஜ்யத்தைப் பண்புடன் ஆள்வதற்கு வேண்டிய 'மூலபலம்' அங்கு இல்லை என்பதைத் தெரிந்து கொள்ளலாம். அதிர்ப்திகள் கிளம்பத்தான் செய்யும், அவைகளை அடக்குவதிலேதான் அரசியல் திறமையே இருக்கிறது, என்ற பழைய கோட்பாட்டை நம்பியதனால் வந்தபலன் இதுதான். ஏராளமான பொறுப்புகளைச் சுமந்துகொண்டு, அதற்கேற்ற அளவு திறமையின்றி இளைத்துப்போனால், எந்த ஏகாதிபத்யமும் தானாகக் கலகலத்துத்தான் போகும். கரைவது, கலகலப்பது, கலைப்பது, சிதறுண்டு போவது, சின்னாபின்னப்படுத்துவது, என்று, முறைகளிலே பலவகைகள் உண்டு. ஆனால் முடிவு ஒன்றுதான், ஏகாதிபத்யம் நிலைக்கமுடியாது என்பதே அம்முடிவு. இந்தநிலைமையினின்றும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள, பிரிட்டன் ஓர் புதியதந்திரத்தை இன்று கையாள்கிறது. அதாவது, சாம்ராஜ்யங்களிலேயும், தன்னுடன் ஏதேனும் ஓர் வகையில் தொடர்புகொண்டுள்ள மற்றநாடுகளிலேயும், சர்வாதிகாரம் பெற்றுள்ள கட்சிகளுடன் உறவாடி, அந்தக் கட்சிகளைத் தழுவி அவைகளைத் துணைகொண்டு, தன் சரிவு விரைந்து நேரிட்டுவிடாதபடி பாதுகாக்கும் தந்திரத்தைப் பிரிட்டன் கையாள்கிறது.

சீனாவிலே, தேசீயவீரர், தியாக புருஷர், என்ற விருதுகள்பெற்று, சர்வாதிகாரியாக விளங்கிய, மார்ஷல் சியாங்-கே-ஷேக்கைப் பிரிட்டன் ஆதரித்ததுடன், சீனாவின் விடுதலைக்கும் விமோசனத்துக்கும், பாடுபடக்கூடிய ஒரே தலைவர் அவரேஎன்றும் பிரச்சாரம் செய்த தன் மர்மம் இதுவே. சீனாவில் சியாங்குக்குச் சர்வாதிகாரம்கிடைத்து, அதே சியாங்கின்நேசம்பிரிட்டனுக்குக் கிடைத்தால், பிரிட்டனுக்கு இலாபமல்லவா! அதுபோலவே கிரீசில், தனக்குத்துணை நிற்கும் கட்சிக்கு ஆதரவுதிரட்டப் பிரிட்டன் வேலை செய்தது. எகிப்திலே, இதுபோன்ற துணைக்கட்சி கிடைக்குமா என்று தேடி அலுத்து முயற்சியினைக் கண்டது. இந்தியாவிலே, இன்று, இதே தந்திரத்தைக்கையாண்டு, ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறது.

பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தை ஒழித்தாகவேண்டும் என்று மக்கள்கொண்டுள்ளஉணர்ச்சியையும், இந்தத் துறையிலே காங்கிரஸ் நடத்திய பலபோராட்டங்களின் மூலம் ஏற்பட்டஎழுச்சியையும் கண்டதும் இந்த உபகண்டத்து முதலாளிகள், தங்கள் ஆதிக்கத்தை நிலை நாட்டிக்கொள்ள இந்த உணர்ச்சியையும் எழுச்சியையும் பயன் படுத்திக்கொள்ள வேண்டி, பண பலத்தைத்தந்ததால், உணர்ச்சியும்எழுச்சியும், பிரமாண்டமான உருவை அடைந்தது. இதனைப்பிரிட்டனில் உள்ள முதலாளிகள் தெரிந்து கொண்டனர். எனவே அந்தப்பிரிட்டிஷ் முதலாளிகள், இந்திய முதலாளிகளுடன் கூடிக் கொண்டு, யாராவதுஆண்டுகொண்டுபோகட்டும், நமக்குள் வியாபார சம்பந்தமான உறவு இருந்தால் போதும் என்று பேரம்பேசிக்கொண்டனர். இந்தப்பேரம்திருப்திகரமாகமுடிந்துவிடவே, இந்தியமுதலாளிகள்,காங்கிரசையும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தையும், நேசர்களாக்கும் கைங்கரியத்தைச்செய்துவைத்துவிட்டனர். அதனாலேதான்,விசித்திரமானகாட்சிகளைக் காண்கிறோம், நம்ப முடியாத செய்திகளைப் படிக்கிறோம்!! எந்தப்பண்டிதஜவஹர்லாலை1942ல், சிறையில் தள்ளினரோ அதே ஏகாதிபத்ய ஏஜண்டுகள், 1946ல் அதேபண்டிதருக்கு, மலாய்போய்வர விமானம் ஏற்பாடு செய்து தந்தனர். பிரிட்டிஷ் தளபதிகளில் ஒருவரான மவுண்ட்பேடன் பிரபுவும் பண்டிதரும், மலாயாவில், பிரபுவின் மோட்டாரில் பவனிவந்தனர்.

உணவு நெருக்கடியைச் சமாளிக்கக் காங்கிரஸ் தீட்டிய திட்டத்தைப் பொதுமக்கள் ஏற்று நடத்த வேண்டுமென்று, சென்னை சர்க்கார் (அட்வைசர்) ஆலோசர்கூறுகிறார்.

இந்த விசித்திரங்கள் போதாதென்று, வேறொன்றும் இப்போது தெரிகிறது.

சோவியத் ரஷியா, இந்தியாவிலே ஆதிக்கம் தேடுகிறதாம். அதனைத் தடுக்க, பிரிட்டிஷ்—காங்கிரஸ் கூட்டுத்தேவையாம்!!

கம்யூனிஸ்டு கட்சியினர் மீது கோபித்துக்கொள்வதுஎன்ற அளவிலிருந்து ஆரம்பமாகிஇன்று,பொதுஉடைமைக் கொள்கையையே பகிரங்கமாகவும், கூச்சமின்றியும் கண்டித்துப் பேசக் காங்கிரஸ் பிரசாரகர்கள் கிளம்பிவிட்டனர்.

ரஷியாவுக்கு ஏகாதிபத்ய ஆசை என்றும், அதனை இந்தியா எதிர்த்தாகவேண்டுமென்றும் பேசப்படுகிறது. ரஷியாவை ஆதரிக்கும் தோழர்களுக்கு இங்கே சோறுகூடப் போடமாட்டோம்,வேண்டுமானால் ரஷியா, பாரசூட்மூலம், அவர்களுக்கு உணவு தரட்டும் என்று, அன்னதான சமாஜத்தலைவரல்ல, அரசியல் பத்திரிகை நடத்தும் அன்பர் சொக்கலிங்கம் தினசரியில் எழுதுகிறார். ஏழைபங்காளரான' இவர்மட்டுமல்ல, பிரிட்டனிலே கார்லி பிரபுவும், ரஷியா, இந்தியாவிலே ஆதிக்கம் பெற விரும்புகிறது என்றுபேசுகிறார்.

பிரிட்டிஷ் பிரசாரம்அற்புதமாக வேலைசெய்து வருகிறது. ரஷியாவின் ஆதிக்கம் வலுவடையும்என்ற பயத்தைக் கிளப்பினால், இந்திய உபகண்டத்திலுள்ள சிற்றரசர்கள் சீமான்கள், கோடீஸ்வரர்கள் ஆகியோருக்குக் குளிரும் காய்ச்சலும் பிறக்கும், அந்த 'வர்க்கம்' தன்னுடைய கங்காணிகளைக்கூப்பிட்டு, "புதியஆபத்துவருகிறதாம்! ஆகவே போர் முறையை மாற்றுங்கள். பிரிட்டனுடன் போராடியது போதும்- ரஷிய ஆதிக்கம் வரவிடாதபடி தடுக்க வேண்டும், அதற்கான பிரச்சாரத்தைத் துவக்குங்கள்; பிரிட்டனுடன் இனி விரோதம் வேண்டாம்; நேசம் வேண்டும், பிரிட்டிஷ் பலத்தைத் துணைகொண்டுதான், இங்குசோவியத்சூறாவளி ஏற்படாதபடி பாதுகாப்புத்தேடிக்கொள்ளவேண்டும்" என்று முதலாளிவர்க்கம் கூறும் என்று பிரிட்டன் அறியும். அந்த வர்க்கத்தால் வளர்க்கப்பட்டுள்ள "காங்கிரஸ்," இப்போது, பிரிட்டனுடன் கூடிக்கொண்டு, ரஷியா மீது துர்ப்பிரசாரம் செய்யும் "பிரச்சார அச்சு" ஏற்படுத்திக்கொண்டது. எனவேதான், பிரிட்டன்,மற்றக்கட்சிகள் எக்கேடுகெட்டாலும் சரி, காங்கிரசைக் கட்டித்தழுவினால்போதும் என்று துணிந்துகூறுகிறது. காதல்நாடகமும் தொடர்ந்து நடக்கிறது! அந்தப் புதிய அனுபவத்தை அலகாபாத் பண்டிதர் சிங்கப்பூர் பவனியின்போது பெற்று ரசித்திருப்பார் என்று நம்புகிறோம்.

"தேசிய உணர்ச்சி" உருவானதும், அதனை'முதலாளிகள்'விலைக்கு வாங்கிக்கொள்வார்கள் என்பதும், முதலாளியின் கைச்சரக்கானதும், அதனை ஏகாதிபத்யம், தோழமை கொள்ளும் என்பதும், அரசியல் அரிச்சுவடி அறிந்தவருங் கூடத் தெரிந்துகொள்ளலாம். ஆனால் ஆசியாவையே உய்விக்கும், அபாரமான காரியத்துக்காக அறிவையும் திறமையையும் அர்ப்பணிக்க முன்வந்ததாகக்கூறிக்கொள்ளும் அன்பர்கள்மட்டும் இதனை அறிந்ததாகத் தெரியவில்லை. என்னகாரணமோ!

ரஷியாவின் ஆதிக்கம் வந்து, விடுமோஎன்றகிலிபோபால்மன்னருக்கும்,ராஜபுதனராஜாக்களுக்கும் கோடீஸ்வரர் பிர்லாவுக்கும், ஆலைஅரசர்டாடாவுக்கும், பண்ணைமுதலாளிமார்களுக்கும், பாட்டாளியின் இரத்தத்தைக்குடிக்கும் பலருக்கும் இருக்கலாம்—சகஜம்! தினசரிஆசிரியருக்கு,எந்தச்சமஸ்தானம் போய்விடும் என்றுதிகில், விருதுநகர் காமராஜருக்கு எந்த ஆலை போய்விடும் என்றஅச்சம், ஏன் இவர்கள்ரஷியாவின்பெயர்கேட்டு நடுங்கவேண்டும்! நடுங்குவதுடன் இல்லையே,பரிதாபத்துக்குரியஅவர்கள், ரஷியாவுக்குப்பயந்து பிரிட்டனுடன் கூடிக்குலவவும் துணிகிறார்களே, அதனைஎன்னென்பது! தேன்றலுக்குப்பயந்து தேள்கடியைத் தேடிப் பெறுபவனை நாம் கண்டதில்லை, ஆனால் தேசபக்தியின் பெயரால்உள்ள, சிலதலைவர்கள், ரஷிய ஆதிக்கம் வருமென்றுபயந்து, அந்தப்பயத்தைக்கிளப்பிவிட்ட பிரிட்டனுடன் கூடிக்கொள்ளவும் துணியும் விசித்திரத்தைக் காண்கிறோம், வியப்படைகிறோம்.

ரஷியாவின் ஆதிக்கம் வருகிறதாம், என்ற செய்தியைக் கேட்டதும், இடியோசைகேட்ட நாகமென்று, மாளிகையிலே,மனோஹரிதரும் மதுக்கிண்ணத்தைப்பெற்று மகிழும் மாமிசப்பிண்டங்கள் மருளட்டும், மக்களின் தலைவர்கள் மருள்வானேன்! மாஸ்கோமணம் பரவுமென்றபயத்தை, மக்களின் வியர்வையைப் பொன்னாக்கி மணியாக்கிப்பூரித்துக்கிடக்கும்மதோன்மத்தர்கள் கொள்ளட்டும், பாட்டாளிகள்பதறுவானேன்? சிங்கார மண்டபங்கள்சீறட்டும், சித்திரச் சோலைகளிலேசிரித்துஆடும் சிற்றிடையாளைப்பறித்தெடுத்தமலரெனக்கொண்டுகாமமதுஉண்டுகளிக்கும் காசாசைக்காரர்கள் கலங்கட்டும், உழைத்து உருமாறி, உலுத்தர்களின் பிடியில்சிக்கிச்சீரழிந்து,கிடக்கும் கோடிக்கணக்கான மக்கள், ஏன்கோபமோ, பயமோகொள்ள வேண்டும்! ஜாரின் கூலிகளாகத் தங்களை ஆக்கிக் கொண்டவர்கள் பயம்கொள்வது சகஜம், முதலாளிவர்க்கத்தின் சவுக்கடியால் வாழ்க்கையிலே வறுமைத் தழும்புகளைப் பெற்றுள்ள மக்கள் ஏன் பயப்படவேண்டும்!

பிரிட்டன், இதுபோது ஆரம்பித்துள்ள "சோவியத்எதிர்ப்புணர்ச்சி" இந்திய முதலாளிகளுக்குப் பரவிவிட்டது. அந்த முதலாளிகளின் கைப்பாவையாகக் காங்கிரஸ்இருப்பதால், அந்தக்காங்கிரஸ் பிரச்சார பீரங்கியை மாஸ்கோ பக்கம் திருப்புகிறார்கள். அந்தத்திருப்பணியிலே தினசரி ஆசிரியர்போன்ற சமஸ்தானமற்ற, ஜெமீனற்ற, பண்ணையற்ற, ஆலையற்றவர்கள் ஈடுபடுவது, நகைச்சுவையுடன் கலந்த சோகசித்திரம்! இந்த விசித்திரநாட்களிலே, இந்த விபரீதக்காட்சியையும், காண்கிறோம்!!

ஆனால், பிரிட்டிஷ் ராஜதந்திரம் இன்று, காங்கிரசைச் சரிப்படுத்திவிட்டதே தவிர, காங்கிரசுக்குப்பல மூட்டிய மற்றச் "சக்திகளை"பிரிட்டன், வெல்லவில்லை — வெல்லவும் போவதில்லை. காங்கிரசுக்கு முடிசூட்டிவிட்டதாலேயே, புரட்சிப் புயலுக்கு மூடியிட்டு விட்டதாகப் பிரிட்டன் கருதுவதற்குக்காரணம், நாம் முதலில் கூறியபடி, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின்மூலபலம்,குறை

# ★ நாம் இருவர் ★



அட்லி

"மிஸ்டர் ஸ்மித்!

இந்தியாவுக்கேற்ற அரசியல் திட்டத்தைத் தயாரித்துக்கொள்ளச் சொல்கிறோம், ஆனால், அங்கே காங்கிரசாரோ இந்தியா ஒரே நாடாக இருக்கவேண்டுமென்கிறனர், ஜனாப் ஜின்னாவோ பாகிஸ்தான் வேண்டுமென்கிறார், இந்நிலையில் என்னசெய்வதுஎன்று தெரியாமல்திண்டாடுகிறேன்." என்று

அட்லி, முதல் மந்திரி, கூறுகிறார்.

"மேஜர் அட்லி!

இந்தியாவிலே பெரிய பஞ்சம் வருகிறது. 1-கோடி மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்ற நிலைமை இருக்கிறது. இந்தியாவுக்கு உணவுப் பொருள் தரும்படி அமெரிக்காவைக் கேட்கிறோம், அமெரிக்காவோ, சீனாவிலும் பெரிய பஞ்சமாம், அவர்களும் ஏராளமாகஉணவுப் பொருள் கேட்கிறார்களே என்று சொல்கிறார்கள், எனக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை." என்று

பென்ஸ்மித், உணவுமந்திரி, கூறுகிறார்.

"நாம் இருவர் படும்பாடு யாருக்கும் வரக்கூடாது!" என்று இருவரும் சேர்ந்து கூறுகின்றனர்.



பென் ஸ்மித்

ந்துவிட்டதுதான். மூளையிலே மூடுபனி கிடப்பதால்தான், இன்னமும் பிரிட்டன், இந்தியாவிலே, மெஜாரிட்டி-மைனாரிட்டி பிரச்னை இருப்பதாக எண்ணுகிறது, இன்றுஇங்கே இருப்பது இனப்பிரச்னை என்பது தெரியாமல்.

முதலமைச்சர் அட்லி, மேதாவித்தனமான ஓர் அரசியல் உண்மையை எடுத்துக்காட்டுபவர்போல, ஒன்று சொன்னார், "மெஜாரிட்டியின் முற்போக்கைத்தடுக்க மைனாரிட்டியை அனுமதிக்கமாட்டோம்" என்று. அதற்குப்பொருள், காங்கிரஸ்கட்சியின்போக்கை மற்றச்சிறுகட்சிகள் தடுக்கும்படியாக நாங்கள் அனுமதிக்கமாட்டோம், என்று கொள்கிறார்கள்; களிப்புமடைகிறார்கள்.

மெஜாரிட்டியாக, உள்ள கட்சியை மைனாரிட்டி ஒரு போதும் தடுக்கத்தான் முடியாது; தடுக்க முடிகிறது என்றால் அப்போது, மெஜாரிட்டி என்றுபெயரளவில் உள்ள கட்சிக்கு, மைனாரிட்டியின் எதிர்ப்புச் சக்தியைச் சமாளிக்கவும் முடியாத அளவு மூப்பு மேலிட்டுவிட்டது என்றுபொருள். எனவே அட்லி துரையின் வாசகத்துக்குப் பொருள் இல்லை. பொருளற்ற வாசகத்தைக் கூறின குற்றம் மட்டுமல்ல அட்லிதுரை மீது நாம் சாட்டுவது, பிரிட்டிஷ் நடத்தைக்கும் இந்தப்பேச்சுக்கும் துளியும் பொருத்தமுமில்லை என்றும் கூறுவோம். மெஜாரிட்டிகட்சியின் போக்கைத் தடுக்கக்கூடாது என்பது பிரிட்டிஷார் கண்டுபிடித்த விதியாக இருக்குமானால், எந்தக் காரணத்தைக்கொண்டு, ஜெர்மனியிலேமெஜாரிட்டிகட்சியாகஇருந்த நாஜிக்கட்சியை அட்லி வர்க்கம் எதிர்த்தது என்று கேட்கிறோம்? நாஜிக்கட்சி,ஜெர்மனியில்மெஜாரிட்டிதான், ஆனால், சர்வாதிகாரவெறி கொண்டு அலைகிறது, ஆகவே அந்தக்கட்சியின் போக்கைத்தடுத்தாக வேண்டும், என்று இதே அட்லி துரையும் அவர்தம் சகாக்களும் பேசினர். அதேபோல, காங்கிரஸ் சர்வாதிகாரக்கட்சி—பாசீச இலட்சணம் அவ்வளவும் அதிலே இருக்கிறது. இதனைமெஜாரிட்டி கட்சி என்பதற்காக், அக்கட்சியின் கோரிக்கையின்படிதான் நாங்கள் நடப்போம், என்று அட்லி கூறுவதுஜனநாயகக்கோட்பாட்டுக்கே ஏற்றதல்ல. ஆனால் நாம் அட்லியைத் தடுக்கவில்லை. காங்கிரசுக்கு முடிசூட்டிவிடச் சொல்கிறோம்—விரைவாகவே அதனைச்செய்யும்படியும் சிபார்சு செய்கிறோம். அப்போதுதான், பிரிட்டிஷ்—இந்திய முதலாளிகளின் கூட்டுஆட்சிநடைபெறுவதும், அந்த ஆட்சி பாட்டாளிகளின் பாதுகாவலனாகி, பாரிலே, இன்பம் பாலிக்கும் சமதர்மத்தைநல்கிய சோவியத்கோட்பாட்டையேகெடுக்கும்காரியத்தில் ஈடுபடுவதையும், வறண்ட தலையும் இருண்ட கண்களும், நொருங்கிய எலும்பும், கொண்டு உழலும் கோடிக்கணக்கான மக்கள் உணர முடியும். அந்த 'உணர்வு' பீறிட்டுக் கிளம்பும்போது, பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்தின்கடைசித் திருவிளையாடலும் அதன், வலையில்வீழ்ந்தோரின்கைங்கரியமும், தவிடுபொடியாகும். ஆகவேதான் நாம்பிரிட்டன், காங்கிரசுக்கு முடிசூட்டுவிழாநடத்தும்நாளை மிகமிக ஆவலோடுஎதிர்பார்த்தவண்ணம்இருக்கிறோம். காசியும்இலண்டனும் கைகுலுக்கிக் கொண்டு, மாஸ்கோமீது பாய்ந்தால், மக்கள், எந்தத்திக்கு நோக்கி நிற்பர், என்பதைக் கூறப் பிரமாதமான அறிவு தேவையில்லை. தினசரி ஆசிரியர் கூடத்தான் தெரிந்து கொள்ளமுடியும்! அந்தத்தெளிவு அவர்களுக்கும் பிறக்க வேண்டும், ஆகவேதான், காங்கிரஸ், சனாதனத்தையும் முதலாளித்துவத்தையும் வளர்க்கும் ஸ்தாபனம் என்றுகூறும் நாம் அதே காங்கிரஸ்பட்டத்துக்கும் வரவேண்டும் என்று கூறுகிறோம். இதுவும் முரண்பாடு அல்ல, காங்கிரசின் மூல நோக்கம் என்ன, என்பதைத் தெரிந்து கொள்ள, நாட்டு மக்களுக்குச் சந்தர்ப்பம் வேண்டும் என்ற கருத்துடனேயே இதனைக் கூறுகிறோம். பாசீசம் பட்டத்துக்கு வந்தால்தான், பாட்டாளி அரசுக்கான புரட்சி தோன்றும். எனவே, முரண்பாடு போல் தோன்றும் பலவற்றை ஆராய்ந்தால், முரண்பாடு அல்ல என்பது விளங்குவது போலவே, மேல்வரிசையாகப் பார்க்கும் போது,

திராவிடர்கழகம்காங்கிரசுக்கு எதிர்க்கட்சி. திராவிடர்கழகம் காங்கிரசுடன் போட்டியிடவில்லை, காங்கிரசாட்சியே ஏற்பட வேண்டும் என்று கூறுகிறது,

என்றவாசகமும்முரண்பாடு போலத்தோன்றும், ஆனால், ஆராய்ந்து பார்த்தால், இதுவும் முரண்பாடு அல்ல, என்ற முடிவு தெரியும்.

———

## காரைக்குடியில் கருப்புச் சட்டைப்படை அமைப்பு கூட்டம்

19—3—46 காலை 10 மணிக்கு காரைக்குடி திராவிடர் கழக இலவசப் படிப்பகத்தில் தோழர் வே. மு. பெ. கருப்பையா அவர்கள் தலைமையில் கருப்புச் சட்டைபடை கூடியது. கூட்டத்திற்கு முக்கியமான தோழர்கள் வந்திருந்தார்கள் தலைவர் முதலில் பேசியதும் தோழர்களான ராமசுப்பையா, நா. ராமசாமி, வே. சௌந்திரபாண்டியன் முதலியவர்கள் கருப்புச்சட்டை படையின் அவசியத்தைப் பற்றிப் பேசினர்.

# திறந்த மடல்

டாக்டர். அம்பேத்கார் அவர்கள்

புது டெல்லி.

## சமுதாய புரட்சியாளரே!

பிரிட்டிஷ் பிரதமர் தோழர் அட்லியின் பேச்சைப்பற்றித் தாங்கள்சரியான சவுக்கடி கொடுத்திருக்கிறீர்கள். பிரிட்டிஷார்வெளியேறும்போது இந்துமதத்தலைவர்களானகாங்கிரசாரிடம்ஆட்சியைஒப்படைத்து விடுவோம் என்று அட்லிகுறிப்பிட்டிருப்பதைப் பற்றித்தாங்கள்கவலைப்படவேண்டாம். தவிர அவ்வாட்சி நிலைத்திருக்குமென்று எவராவது கருதுவார்களேயானால் அது ஏமாற்றமாகவே முடியும். தாங்கள் குறிப்பிட்டுள்ளது போன்று இந்து ராஜ்யம் ஏற்பட்டால் வெளியார் உதவியை நாடவேண்டிய அவசியமும் இல்லை. இந்நாட்டில் இந்து ராஜ்யம் மீண்டும்ஏற்படுவதற்குப் பாங்கியர்கள் உதவி செய்வார்களேயானால் பலத்த புரட்சியே ஏற்படும். அட்லியின் பேச்சைக்கேட்டு இன்று ஆனந்தமடையும் அக்ராகாரம் வருங்காலத்தில் அலறப்போவது உறுதி என்பதையும் எடுத்துக்காட்ட விரும்புகிறேன். எனவே வரப்போகும் வெள்ளையர் ஆட்சியின் மந்திரி தூது கோஷ்டியினருக்கு இவ்வெச்சரிக்கையை எடுத்துக்காட்டி இடித்துக்கூறுங்கள். தங்களின் எச்சரிக்கையைப் பாங்கியர் எடுத்துக்கொள்ளாவிடின் திராவிடம் அப்பாங்கியர் ஆட்சிக்குச்சரியான பாடம் கற்பிக்கத் தயாராய் இருக்கிறது என்பதையும் தங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கூத்தரசன்.

———

சர். டேஜ் பகதூர் சாப்ரு, அவர்கள்,

அலகாபாத்.

## வடநாட்டு மிதவாதியே!

பிரிட்டிஷ் மந்திரி தூதுகோஷ்டி பற்றித்தாங்கள் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தூது கோஷ்டியினர் வெற்றிபெற வேண்டும் என்று கூறியிருப்பதோடு, "இச்சமயத்தில் சின்னப்புத்தித்தனம்—தன்னலம் எதுவும்தலைகாட்டக்கூடாது" என்றும்சுட்டிக்காட்டியிருக்கின்றீர்கள்.

ஆனால் தாங்கள் இவ்வாறு கூறியதின் கருத்தைச் சரியாகப் புரிந்துகொள்ளாத பலர் ஜனாப் ஜின்னா அவர்களையே தாங்கள் இவ்வாறு கூறியிருக்கின்றீர் என்று மனப்பால் குடித்துக்குடித்து மகிழ்கின்றனர்.

அரசியல் அறிவு கொண்டு பார்க்கும் ஒவ்வொருவருக்கும் தெரியும் சென்ற சிம்லா மாநாடு வெற்றி பெறாததற்கு காரணம் காங்கிரஸ் தலைவர்களின் அதிக ஆசையும், எதேச்சாதிகாரமும்என்று. இதைத்தாங்களே அன்றுஎடுத்துக்காட்டி வருத்தமும் தெரிவித்திருக்கின்றீர்கள். எனவே, மந்திரி தூது கோஷ்டி வரும் இந்நாளிலாவது தங்களின் எடுத்துக்காட்டை, "தேசியத் தலைவர்கள்" என்று கூறிக்கொள்ளும் பேர்வழிகள் கவனிப்பார்களா என்பதும் சந்தேகந்தான். என்றாலும் தாங்கள் வழக்கம்போல ஓயாது ஊதும் சங்கை மாத்திரம் நிறுத்தவேண்டாம்.

கூத்தரசன்.

# ஒரு நஷ்டம்!

★

"திராவிடநாடு திராவிடர்க்கானால் ஆதித் திராவிடத் தோழர்களுக்கு என்ன இலாபம்?"

சென்னை, சினிமா சென்ட்ரலில், சென்றகிழமை, பெரியார்விரவுரையாற்றும்போது, மேற்கண்டகேள்வியைக்கேட்டார் ஒருவர்.

வேறு தோழர்களாகஇருந்தால், இக்கேள்விக்கு, என்னபதில் கூறுவர்! ஒரு சிலர், கோபத்தோடு "இலாபநஷ்டக்கணக்குப் பார்க்கலாமா, கொள்கைக்கான போராட்டத்தின்போது?" என்று தத்துவம் பேசியிருப்பர். மற்றும்சிலர், 'என்ன இலாபம் என்றுகேட்கிறாரே தோழர் அவரைக் கேட்கிறேன் நான், இவர்களால் திராவிட நாட்டிற்கு என்னஇலாபம், அதைக்கூறட்டும் முதலில்' என்றுகூறியிருப்பர். இன்னும்சிலர், திராவிடநாடுதிராவிடருக்கானால் ஆதித்திராவிடத் தோழர்களுக்கு இன்னின்ன விதமான இலாபம் கிடைக்கும்என்றுவிவரிக்கத்தொடங்கி யிருப்பர். பெரியார் தந்த பதிலோ, இப்படிப்பட்ட முறையிலே அல்ல! ஒரு களிப்புக் குண்டுவீசினார், கொட்டகை முழுவதும், சிரிப்புமயமாகும்படி.

"திராவிடநாடு திராவிடருக்கானால், ஆதித்திராவிடருக்கு என்ன இலாபம்" என்றுகேள்வியை, உரக்க வாசித்தார், அவருக்கென்றே இயற்கையாக அமைந்திருக்கும் அபூர்வமான கொச்சை மொழியிலே, உடனேபதில் தந்தார்.

"தோழர்களே! ஒரு இலாபமும் இல்லை. ஒருநஷ்டம் உண்டு. திராவிடநாடு திராவிடருக்கானால்ஆதித்திராவிடத்தோழர்களுக்கு ஓரேஒரு நஷ்டம்உண்டு. என்ன நஷ்டம்? ஆதித்திராவிடர் என்றசொல்லிலே ஆதி என்ற இரண்டுஎழுத்துக்களும், வெட்டி எடுத்துவிடப்படும், அது தான்நஷ்டம்!! இதற்குத்தயாரா?" என்றார், உடனே, கொட்டகை முழுவதிலும், ஒரே ஆனந்த ஆரவாரம்! பெரியார், வாழ்க! என்ற பேரொலி. பெரியார் காணவிரும்பும் திராவிடத்திலே, திராவிடர்—ஆதித்திராவிடர்என்றபேச்சு இராது. திராவிடரே அனைவரும். இந்தச்சமத்துவ முழக்கம், அன்று அங்கு கூடியிருந்தவர்களைவரையும், களிப்புக்கடலில் ஆழ்த்திற்று.

—●—

நாகைத்திராவிட நாடக சபா, ஆத்தூர்
எமது அடுத்த நாடகம்
"கமலா"
ஆத்தூர் மெஹர் தியேட்டரில்
நடைபெறும்

## [illegible]

3-ம் பக்கத் தொடர்ச்சி

புராணத்தில் காணப்படும் நிகழ்ச்சிகள். இந்நிகழ்ச்சிகளை ஊன்றிக் கவனிக்கும்போது, திருநாவுக்கரசர், கதவைத் திறக்க முயன்றது பெருங்குற்றமென்பதும், அதுவும் சம்பந்தர்கூட இருக்கும்போது, அவரை அந்தக் காரியத்தைச் செய்ய விடாமல், அப்பர் அதனை மேற்கொண்டது மிகமிகப் பெருந்தவறு என்பதுமே புலனாகின்றன. இந்த உண்மையை, அப்பர் கூறுவது போலச் சேக்கிழார் எடுத்துக் காட்டியுள்ளார். ஏன் அவ்விதம் எடுத்துக்காட்டினார் என்றால், 'புராணம் பாடப் புகுந்ததன் நோக்கத்திற்குச் சிதைவு உண்டாகாதிருக்கவே சேக்கிழார் அவ்விதம் செய்தார். புராணம் பாடியதன் நோக்கமென்ன? இதைச் சொல்லவும்வேண்டுமோ? பார்ப்பனர்க்கு உயர்வும் மற்றையோர்க்குத் தாழ்வும் கற்பிக்கவே சேக்கிழார் பெரிய புராணம்பாடினார் என்பதற்கு இவ்வொரு நிகழ்ச்சியே போதும். இல்லையேல், பார்ப்பனனாகிய சம்பந்தர் பக்கத்திலிருக்கவும், பார்ப்பனனல்லாத தமிழனாகிய அப்பர், தாம் கதவைத் திறக்க முயன்றது குற்றமென்று அப்பரே கருதியதாகச் சேக்கிழார் பாடியிருப்பாரா? அல்லது, அப்பருக்குக் காட்சியளிக்காத திருவாய்மூர்ச் சிவன், சம்பந்தர் வந்ததும் அவருக்கு மட்டும் காட்சியளித்தார் என்று கூறுவாரா? இவை எதனைக்காட்டுகின்றன? பார்ப்பனர் உயர்வையும் ஏனையோர் தாழ்வையுமன்றி இந்நிகழ்ச்சிகள் வேறெதனையாவது காட்டுகின்றன என்று எவராவது கூறமுடியுமா?

இனி, அப்பர், சிவன் தமக்குச் செய்த கொடுமையைப் பொறுக்க முடியாதநிலையில், தாம், கதவு திறப்பதற்கு எடுத்த முயற்சி மிகச்சிறியதென்றும், சம்பந்தர் கதவு அடைக்க எடுத்த முயற்சி மிகப் பெரியதென்றும் எடுத்துக் காட்டும் முறையில், "உறைக்கப்பாடிக் கதவை அடைப்பித்த அன்பர்" என்று சம்பந்தரைப்பற்றிக் குத்தலாகக்கூறியுள்ளார். ஆனால், உண்மையில் உறைக்கப்பாடியது யார்? சம்பந்தரா? அப்பரா? அப்பர் ஒன்றுக்குஒன்பதுபாடல் உறைக்க உறைக்கப் பாடியும் கதவு திறக்கப்படாது போகவே, பத்தாவது பாடலை மிகவும் கடுமையாக—நன்றாக உறைக்கும்படி "உமக்கு இரக்கம் ஒன்றில்லையா?" என்று பாடியதையும், சம்பந்தர் சாதாரணமாகவே "சதுரம் மறை" என்று அடியெடுத்துப் பாடத் தொடங்கிய உடனேயே—பாட்டு முடிவதற்குள்ளாகவே கதவு அடைபட்டதையும் ஒப்பு நோக்கிப் பார்ப்பவர்க்கு, அப்பர் எத்துணை அளவுக்கு மனம்நொந்து இங்ஙனம் கூறியிருத்தல் வேண்டுமென்பதை எண்ணும்போது, தமிழர்களை வேண்டுமென்றே இழிவுபடுத்த எழுந்த இத்தகைய புராணங்கள் இன்னும் நம்மிடையே இருக்கின்றனவே! இவற்றை ஆதரிக்கும் மானங்கெட்ட சிலர் இன்னும் நம்மிடையே உலவுகின்றனரே! தமிழ்மக்கள்விழிப்படைவது எப்போது? இவற்றைஆதரிப்பவர்கள் தங்கள்தவறை உணர்ந்து திருந்துவது எந்தக் காலம்? என்ற இன்ன பிற கவலைகளே எம்மை வாட்டுகின்றன.

இனிப், பூட்டப்பட்டிருக்கும் ஒரு கதவைத் திறக்க வேண்டுமானால், அதற்குரிய திறவுகோல் கொண்டே திறப்பது வழக்கமாய் இருக்க, இங்கே, பூட்டப்பெற்ற கதவு, பாட்டைப் பெற்றவுடன் திறந்ததாகச் சொல்லப்படுகிறது. ஆனால், திறந்த கதவை மீண்டும் அடைப்பதற்கும் பாட்டுப் பாடவேண்டுமோ என்பதுதான் இங்கு ஆராய்ந்து பார்க்க வேண்டியதாகும். பாட்டினால் திறக்கப்பட்ட கதவைப் பாட்டினால்தான் அடைக்க முடியும் அல்லது அடைக்க வேண்டும் என்று எவரேனும் கேட்பாராயின், அவருக்கொன்று கூறுகின்றேன். அஃதாவது, எலும்பைப் பெண்ணாக உயிர்த்தெழச்செய்தார் சம்பந்தர் என்றும் ஒரு நிகழ்ச்சி பெரிய புராணத்தில் காணப்படுகின்றது. ஆனால், அப்பெண் இறக்குங்காலத்தில் சம்பந்தர் அங்கு போந்து பாடல் பாடி அப்பெண்ணை இறக்கச் செய்யவில்லை. அப்பெண் தானாகவே இறந்துபட்டாள். எனவே, திறக்கப்பாடியதால், அடைக்கவும் பாட வேண்டியதில்லை. அது தானாக அடைபடாவிட்டாலும் யாராவது கதவைப் பிடித்து இழுத்தடைத்து விடலாம். ஒருக்கால், அக்கதவு, கடவுளின் ஆணையால் பூட்டப்பெற்றுப், பின், கடவுள் அருளைப்பெற்ற அடியார்களால்தான் அது அடைக்கவும் திறக்கவும் முடியும் என்று கடவுள் கட்டளையிட்டிருந்தால், பத்துப்பாடல்களால் திறபட்ட கதவை, அடைப்பதற்கும் பத்துப் பாடல்கள் பாடப்பட வேண்டுமன்றோ! அங்ஙனமன்றித், திறப்பதற்கு மட்டும் பத்துப்பாடல்களும், அடைப்பதற்கு ஒரு பாடலும் போதுமென்றால், அந்நிகழ்ச்சி அறிவுக்குப் பொருத்தமாகவும் இல்லை; கடவுளின் திருவிளையாடல்களுக்கு ஏற்றதாகவும் காணப்படவில்லை. கடவுளின் விருப்பம், பாடலால்தான் அக்கதவு திறக்கவும் அடைக்கவும்பட வேண்டியிருந்தால், திறப்பதைஒருவகையாகவும், அடைப்பதை இன்னொருவகையாகவும் நிகழத் தமது திருவிளையாடலைப் புரிந்திருப்பாரா? அது விருப்பு வெறுப்பற்றதாகச் சொல்லப்படும் கடவுளின் தன்மைக்கு ஏற்றதாகுமா? அன்றியும், வேதங்களால் பூட்டப்பெற்ற கதவை, வேதங்கட்குத் தலைவனான சிவனுடைய உடன்பாடு (உத்தரவு) பெறாமல் திறக்க முயன்றது பெருங்குற்றமன்றோ! அதுவுமன்றி, "எனது அடியவர்களான சம்பந்தரும், அப்பரும் இங்கே வருகின்றனர்; அவர்களைக்கொண்டு இதுகாறும்அடைப்பட்ட கதவைத் திறப்பியுங்கள்" என்று கடவுள் அவ்வூரிலுள்ள தமது குட்டி அடியவர்கள் கனவிலாவது தோன்றிச் சொன்னாரா? இல்லையே! கடவுள் தமது அருள் விளையாட்டுக்களையெல்லாம், தமது அடியவர்கள் கனவில் தோன்றியும், பார்ப்பன வடிவந்தாங்கியும் வந்தே செய்ததாகப் புராணங்களிற் சொல்லப்படுகின்றதே! இந்நிகழ்ச்சி ஏன் அங்ஙனம் நடைபெறவில்லை? என்பன போன்றவைகளையாவது இத்தகைய கதைகளை அப்படியே நம்பி மகிழும் அன்பர்கள் ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? இனி, அக்கதவு அடைக்கபட்டிருந்த காரணத்தையும், பின் அது திறக்கப்பட்ட நோக்கத்தையும் பற்றிய உண்மைகளை ஆராய்ந்து பார்ப்போம்.

திருமறைக்காட்டில் இருந்த சைவ சமயக் கொள்கையோடுகூடிய அச்சிவன் கோயில் அடைபட்டிருந்ததற்குஇரண்டு காரணங்கள் சொல்லலாம். ஒன்று, அக்கோயில் மேற்பார்வையாளருக்கிடையேயோ அல்லது பூசாரிகளுக்கிடையேயோ யாதாயினும் சச்சரவுகள் உண்டாகி, அச்சச்சரவுகள் தீரும் வரையில் கோயிலைப்பூட்டிவைத்திருந்திருக்கலாம். மற்றொன்று, சம்பந்தர், அப்பர்முதலான சைவசமய ஆசிரியர்காலம், சமணசமயம் இவ்வுபகண்டத்தில் தலை சிறந்து விளங்கிய காலமாகும். எனவே, அக்காலத்திலிருந்த சமணமக்கள், அறிவுக்குப் புறம்பான கொள்கைகளோடு கூடிய அக்கோயிலை மக்கள் வழிபட்டுப்பாழடையாது தடுக்கும் முறையில், சைவர்களை எதிர்த்து வெற்றிபெற்றுக் கோயிலைப் பூட்டி வைத்திருந்திருக்கலாம். நான் இங்கு கூறிய இரண்டு காரணங்களில், முதலாவது காரணம், எந்தக்காலத்திலும் பொதுவாகநிகழக்கூடியதென்பதையும், இரண்டாவது காரணம், சிறப்பாக அக்காலநிலையை ஒட்டி நிகழ்ந்திருக்கக் கூடும் என்பதையும் காய்தல் உவத்தல் இன்றிய நடுவர் ஒப்புக்கொள்ள மறுக்க மாட்டார்கள் என்றே நம்புகிறேன். எனவே, சைவசமய ஆசிரியர்களான அப்பரும் சம்பந்தரும் அங்கு சென்றபோது, கோயில்அடைக்கப்பட்டிருந்ததைக்கேள்விப்பட்டு, அதன் காரணத்தை வினவி, முதற்காரணமாய் இருந்திருப்பின், அவர்களுக்கிடையே இருந்தசச்சரவுகளை நீக்கி வைத்துக் கோயிலைத் திறந்துவிட்டிருக்கக்கூடும். இரண்டாவதுகாரணமாய் இருந்திருப்பின், சமணர்களோடு மதப்போர்தொடுத்துஅவர்களை வென்று கோயிலைத் திறந்திருக்கக் கூடும். ஆனால், பழையாறை, மதுரை, முதலான ஊர்களில், சமணர்களோடு மதப்போர்தொடுத்து, அவர்களைக் கொன்றழித்துக்கோயில் திறந்த செய்திகள் பெரியபுராணத்தில் வெளிப்படையாகவே காணக்கிடக்கும்போது, இவ்வூரிலும் மதப்போர் நிகழ்ந்து சமணர்களை அழித்துக்கோயில் திறக்கப்பட்டதாயின், பெரியபுராணம் பாடியவர் அந்நிகழ்ச்சியையும் குறிப்பிட்டிருக்கமாட்டாரா? 'நீர் கூறுவது பொய்யேயன்றி மெய்யல்ல' என்று பதறிச்சிலர் சீறுவர் என்று கருதியே, எவராலும் மறுக்கமுடியாத காரணத்தை முதலிலே காட்டியுள்ளேன். என்றாலும், முதற்காரணத்தைவிடஇரண்டாவது காரணமே உண்மையெனக் கொள்ளும் முறையில் பெரியபுராணத்தில் ஒரு நிகழ்ச்சி காணப்படுகின்றது. அதாவது, அடைத்திருந்த கதவு திறக்கப் பாடியதும், அப்பர், சம்பந்தரைநோக்கி, அதை அடைக்கப் பாடும்படி வேண்டிக் கொள்ளும்போது,

> "..............................
> திறந்த வாறடைக்கப்பாடி அருளும்
> நீர் என்றார் தீய, மறம்புரி அமணர்
> செய்த வஞ்சனை கடக்கவல்லார்"

என்று கூறியதாகச் சேக்கிழார் பாடியுள்ளார். அதாவது, கொடுமைகளையே செய்யக்கூடிய சமணர்களின் வஞ்சகச் செயல்களை வெற்றி கொள்ளக்கூடிய ஆற்றல் படைத்த அப்பர், சம்பந்தரை நோக்கித்திறந்தகதவைஅடைக்கப்பாடும்படி கேட்டுக்கொண்டார் என்பதாகும். ஆனால், இவ்விரண்டு காரணங்களும்புராணத்திலுள்ள கதையை அப்படியேவைத்து, ஒருக்கால் இவ்வாறு நடந்திருக்கலாமோஎன்ற ஐயப்பாட்டோடு ஆராயப்பட்ட உண்மைகளாகும். ஆனால்,புராணம் பாடியதன் நோக்கத்தையே உண்மையெனவைத்து ஆராயும்போது, அவ்விரண்டு காரணங்களும் பொதுவாக இயற்கைக்கும் காலநிலைக்கும் ஏற்பநடந்திருக்கலாம் என்பதைத் தவிர, உண்மையாய் இருக்க முடியாதென்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது. ஏனென்றால், புராணம் பாடியதன் நோக்கம், பார்ப்பனர்க்கு உயர்வும் ஏனையோர்க்குத் தாழ்வும் கற்பிக்கவே என்ற அடிப்படையின் மீது பாடப்பட்டதாலேயே, மறைக்காட்டுக் கோயிற்கதவு பூட்டப்பட்டுக் கிடந்ததென்றும், அதைத் திறப்பதற்கு அப்பர் முனைந்தது தவறென்றும்; சம்பந்தரே அந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டுமென்றும் பொருள்படச் சேக்கிழார் பாடியுள்ளார். இல்லையேல், "சம்பந்தர் இருக்கும்போது நான் கதவைத் திறக்க முயன்றது தவறு" என்று அப்பர் நினைத்ததாகச் சேக்கிழார் பாடியிருக்க வேண்டியதேயில்லை.

அப்பரும் ஆண்டவன் அருளைப்பெற்றவர்; சம்பந்தரும் ஆண்டவன் அருளைப் பெற்றவர். இருவரும்ஆண்டவன் அருட்டிறங்களை அழகாகப்பாடும்ஆற்றலை அவனருளால் பெற்றவர்கள். அதுமட்டுமல்ல; இருவரும் சைவ சமயஆசிரியர்கள்என்ற பட்டத்தையும் பெற்றவர்கள். அப்படியிருந்தும், சம்பந்தர் செய்யவேண்டிய காரியத்தை அப்பர் செய்ய முயன்றது பெருங்குற்றமென்றுபொருள்கொள்ளும் முறையில் சேக்கிழார் புராணம் பாடியதன் நோக்கமென்ன? ஒருதமிழன், அவன் எவ்வளவ அறிவாற்றல்உள்ளவனாய்இருந்தாலும், ஒரு பார்ப்பனன் முன்னிலையில் அடங்கிஒடுங்கி ஏவல்கேட்டுநிற்பதைவிட்டுத், தான்தோன்றித் தனமானகாரியங்களைச்செய்யப்படாது, அங்ஙனம்செய்ய முற்படுவது இந்துமதக்கோட்பாட்டுக்கே மாறு என்பதை எடுத்துக்காட்டவேசேக்கிழார் இங்ஙனம்பாடியுள்ளார்என்பதனை இனிமேலாவது நம்மவர் உணரவேண்டுகிறேன்.

இனி, நான் இங்ஙனம் கூறுவதினின்றும், இயற்கைக்கும் அறிவுக்கும் புறம்பான சைவ சமயத்தைச்சார்ந்து அதன் வழிச்சென்ற அப்பரை நான் ஆதரிப்பதாக எவரும் கருதிமயங்கிவிடக்கூடாது. மற்று, ஒரு தமிழன், பார்ப்பனரின் சுக வாழ்வுக்கு வழிகோலும் சமயத்துறையைச் சார்ந்து அதற்கு ஆதரவாய்இருந்தபோதிலும், அங்கேயுள்ள பார்ப்பனர்களை மிஞ்சி எந்தக்காரியமும்—எந்தக் காலத்திலும்—எந்தக்காரணத்தைக்கொண்டும் செய்யமுடியாது – செய்யப்படாது என்பதை எடுத்துக்காட்டவே இந்நிகழ்ச்சியை இங்கு குறிப்பிட்டேன். அன்றியும் அறிவாற்றலும் தன்மான உணர்ச்சியும் வாய்ந்த ஒரு தமிழன், இவ்வாறு, சமயப்படுகுழியில் வீழ்ந்து தன்னுடைய வாழ்க்கையைக் கெடுத்துக்கொண்டதுமன்றி, மற்றைத் தமிழர்க்கும் நீங்கா இழிவையும் உண்டாக்கி வைத்தானே என்ற கோபம்கலந்த இரக்கத்தைஅப்பர் போன்ற தமிழர்மீது காட்டாமல் இருப்பதற்குமில்லை. ஒருகாலத்தில்சமணமதத்திற்குத்தலைவனாகவிளங்கிப் புகழ்பெற்றிருந்தஅப்பர்,பின், சைவமதத்தலைவனாகியும், தான்ஒருதமிழன்என்ற காரணத்தால், தன்னையொத்த—ஆனால் வயதில் மிகவும்குறைந்த சைவமதத்தலைவனான பார்ப்பனச் சம்பந்தரின் பல்லக்கைச் சுமந்துதிரிந்தான் என்ற நிகழ்ச்சியைப் புராணத்தில் படிக்கும் எந்தத் தன்மானமுள்ள தமிழனுக்குத்தான் குருதிகொதிக்காமல் இருக்கமுடியும்! அந்தோ! தமிழனே இதுவா உன் நிலை! இனியும் இப்படியா நீ இருத்தல்வேண்டும்?

---

## திருச்சியில் கவியரசர் பாரதிதாசன்

# பாராட்டு விழா

★

### எல்லாக்கட்சி - பொதுக்கூட்டம்

### 27—3—46ல் நடைபெறும்

கவி அரசர் பாரதிதாசன் அவர்களின் தமிழ்ப்பணியைப் பாராட்டுவதற்காக நாளது 27-தேதி மாலை 6-மணிக்குத் தெப்பக்குளம் பிஷப்ஹீபர் கல்லூரி மண்டபத்தில் திருச்சி மக்களின் மாபெரும் பொதுக்கூட்டமொன்று நடைபெறும். அதுசமயம் திருவாளர்கள்

**சென்னை. சிவஞானக்கிராமணியார், ப. ஜீவானந்தம்,**
**தி. ஆ. பெ. விசுவநாதன், எல். எஸ். ஆறுமுகம்,**
**பண்டித நடேச முதலியார், சி. என். அண்ணாத்துரை**

ஆகிய பலர் சொற்பொழிவாற்றுவார்கள். திருச்சிப் பொது மக்கள் அனைவரும் கவி மன்னர் பாராட்டு விழாவில் பங்கெடுத்துக்கொள்ளவேண்டுகிறோம்.

இங்ஙனம்:

| | |
|---|---|
| பி. ஆர். தேவர், எம்.எல்.ஏ. | ஏ. இருதயசாமி, எம்.ஏ.எல்.டி. |
| வி. சாரநாதய்யங்கார் | டாக்டர் எட்வர்ட் மதுரம் |
| எப். ஜி. நடேசய்யர் | கி. அ. பெ. விசுவநாதன் |
| ஜி. ரங்கசாமி அய்யங்கார், எம்.ஏ.எம். எல். | டி. பி. வேதாசலம் |
| | டி. சிவஞானம், |
| ஏ. சின்னதுரை அம்பலகார் | திரு. லோகசீதாராம், 'சிவாஜி' ஆசிரியர்கள். |
| எம். சிங்காரம் | |
| எல். எஸ். ஆறுமுகம் | எஸ். எம். சுல்தான்பக்தாதி, |
| என். மாசிலாமணி | எம். ஏ. எஸ். மகமத் இப்ராஹீம், 'சமரசம்' ஆசிரியர்கள். |
| டி. எஸ். மாணிக்கம் | |
| பண்டித நடேச முதலியார் | டி. எம். முத்து, காரியதரிசி, |
| பண்டித ரம்போலாமாஸ்கர்னஸ் | ஜில்லா பத்திரிகையாளர் சங்கம். |

---

வேலூர் திராவிடர் கழகப்

### பொதுக்கூட்டம்.

31—3—46 ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்குத் தோழர் N. V. நடராஜன் தலைமையில் நடைபெறும். தோழர் K. அன்பழகன், M. A. 'திராவிடர் நிலை' என்பதபற்றிச்சொற்பொழிவாற்றுவார்

●

### "உதயம்"

ஓர்சிறந்த வார வெளியீடு. திருவத்திபுரம் தோழர் **மா. கந்தசாமி** அவர்களை ஆசிரியராகக் கொண்டு விரைவில் வெளி

—: வரும். :—

# சேலம் பிராமண சபையும் சனாதன தருமமும்

[கைவல்யம்]

சேலத்தில்பிராமணமாநாடு C.P. அய்யர் அவர்களின் தலைமையிற் கூடி முடிந்தது. எந்தச்சமூகத்தின் சபையும் தங்கள் முற்போக்குக்கும், மற்றைய சமூகங்களைப் பிற்போக்கில் தள்ளாமலும் நடந்து முடிவடைவது வரவேற்கக்கூடியதும், ஐக்கியப்பட்டுப் பரஸ்பர நல்லெண்ணத்துடன் வாழக்கூடியதுமாகும்.

இதற்கு முன் துவார்என்கிறஊரிலும், கும்பகோணத்திலோ மதுரையிலோ ஒரு மாநாடும் ஆக இரண்டு பிராமண மாநாடுகள் கூடின. அவைகளில், க்ஷத்திரியன், வைசியன் என்கிற இரண்டுஜாதியுமில்லை, பிராமணன், சூத்திரன் என்கிற இரண்டு ஜாதிகள்தான் உள்ளன என்று ஒருமாநாட்டிலும், பிராமண தருமம் கெட்டுப்போவதால் ஐம்பது எக்கரா நிலத்தில் ஒரு பெரிய பள்ளிக்கூடம் கட்டி, அதில் வேதஸ்மிருதிகளைப் பிராமணப் பையன்களுக்கும், புராண இதிகாசங்களைச் சூத்திரப் பையன்களுக்கும்கற்றுக்கொடுக்கவேண்டுமென்றும், அதற்குச்சூத்திரமடையர்களிடமிருந்தே பணம் வசூலித்து அறிவுள்ளபிராமணர்கள் அனுப்பவேண்டுமென்கிற கருத்தைவைத்து இண்டாவதுமகாநாட்டிலும் தீர்மானம் பண்ணினார்கள். அந்தத்தீர்மானங்கள் நியாயத்திற்குவிரோதம், ஆணவமும், அகம்பாவமும் கொண்டது, பிராமண புத்தியும், தந்திரமும் பிரயோஜனப்படாது, அவை எவரும் ஒத்துக்கொள்ளக்கூடியதுமல்ல என்று அப்பொழுதே எழுதினோம்.

சேலம் மாநாட்டில் சர். சி. பி. அய்யர் தலைமை உரை, யாராலும் அறிய முடியாத அந்தப் பரம்பொருளின் முன்னிலையில் ஒவ்வொருமனிதனும்நீல ஆகாயத்தின் கீழே, நட்சத்திரப் பிரகாசத்தின் கீழே, எல்லையற்ற இயற்கைக் கொடி மரத்தின் கீழே சகோதர மனிதனுக்குச் சமமாகத் தலைநிமிர்ந்து எல்லோரும்நடக்கவேண்டுமென்று மேதாவிகள் சொல்லும் தர்மத்தின் வழியே செல்லுமோ? அல்லது ஆத்மாவினின்று சுதந்திரத்தையும் நியாயபுத்தியையும் பிரித்து எடுத்து விடுகிற மதக் கோட்பாடுகளை, நூல்களை, உருவங்களை, சட்டங்களை, எல்லாவற்றையும் புரோகிதச் சிம்மாசனத்தின்கீழே போட்டுத்தெய்வத்தின்பெயராலும், சாஸ்திரத்தின்மாறுபாட்டாலும்ஒருவன்மற்றொருவன் தோளில் ஏறிக்கொண்டு அடக்கி அடிமைகொள்ளும் புரோகிதக்கூட்டத்தின் வழியே போகுமோ? அல்லதுபழைய உயிரில் இனியும் ஆத்மாபிரகாசிக்கிறது, பழைய உயிரில் புதியஉருவத்தைச்செலுத்துவோம், பிராமண தருமத்தைக் காப்பாற்றுவோம்; வறுமையில்முழுகிப்போன தருமங்கள் காலாவதியான கணக்குப்புத்தகங்களைப் புரட்டிப், பலனற்றுப்போன கடன் பத்திரங்களை ஆராய்வதுபோல அழகான யோசனைகளை நயமாகப்பேசி விடுவாரோ என்றெல்லாம் நினைத்தேன். ஒருஜன சமூகச்சபைக்கு எவ்வளவுசொல்லவேண்டுமோ அவ்வளவையும் சொல்லி, அக்கம்பக்கத்தை இழுத்துப்போடாமல், உலகப்போக்கையும்அதிலுள்ள புத்தியின் வியாபகத்தையும் ஆலோசித்துச்சொன்னது, ஒருசபையின் தலைமையுரை இதைவிடச் சரியாக இருக்காது.

அவர் உரையில் எல்லோரும்கவனிக்கக்கூடிய ஒருவிஷயமும்இருக்கிறது. அதை நாமும் கவனிக்கவேண்டும். உத்தியோகத்தைப்பிராமணர்கள் தேடவேண்டியதில்லை, உத்தியோகம்தானே அவர்களைத் தேடிவரும் என்றார். ஏன் அப்படிச் சொன்னார்? பதவிசெல்வம்என்கிற ஆணவத்தாலா? அல்லது உயர்ந்த ஜாதி என்கிற பெருமையினாலா? அல்ல. புத்தி, படிப்பு, உழைப்பின் தன்மை, சந்தர்ப்பத்தை விடாமல் உபயோகப்படுத்திக் கொள்ளும் வழி முதலியவைகளெல்லாம் பிராமண ஜாதியான தன் ஜாதிக்குத் தெரியுமென்பது அவருக்குத் தெரியும். அது புத்தியுடைய எல்லோருக்கும் உயர்ந்ததும் உரித்தானதுமாகும். பின்சபைக்குவந்தவைதிகர்களுடையதும் மடாதிபதிகளுடையதுமான ஆசீர்வாதங்களெல்லாம்குறுகியகளத்திலிருந்து வந்தவைகள். களமும் விரிந்து சின்னத்தலையும் பெரிய தலையானால் அவைகளும் நின்றுவிடும். சரியான நேர்வழிக்கும் வந்துவிடும்.

வரவேற்புரையில் பிராமணர்களைக்குற்றம் சொல்லுகிறார்கள், அதுகூடாதென்று காணப்படுகிறது. பலநாட்களாகப் பிராமணர்களைக் குற்றம் சொல்லுகிறோம். ஏன் குற்றம்சொல்லுகிறோம்என்று நினைத்துப் பார்க்க வேண்டிய பொறுப்பு அந்தச் சமூகத்திற்கு இருக்கிறது. அங்கேஅவர்கள்புத்தி கட்டாயம் செல்லவேண்டும். நாங்கள்எத்தனையோகுற்றங்கள்சொன்னோம். புரட்டுப்பித்தலாட்டங்களைப் பிரத்தியட்சமாகக் காட்டினோம். இனியும் எங்களைப் பாதிக்கும்படியான குற்றங்களை அவர்கள் விடவில்லை. உண்மை உணர்ந்த அவர்களில் சிலரிடமிருந்தேனும் உண்மைக்குப்பரிந்து பேசும் குணம் வெளிப்படவில்லை. உண்மையைக் காண்பதும், கண்டதை உண்மையாகச் சொல்லுவதும் பிராமணனின் இலட்சணம், அதுதான் பிராமணதருமம். அதற்குத்தான் சனாதனதருமம் என்று பெயர். சனாதனதருமம் என்றால் பழைய தருமம்என்று அர்த்தம். அவர்கள் எழுத்து, பேச்சு, எண்ணம், போக்கு, நடத்தை முதலியவைகளிலுள்ள குற்றங்களைப் பிரத்தியட்ச அனுபவத்துடன் சொல்லுகிறோம். அது சரியல்ல என்று நியாயத்துடன் சொல்லட்டும். அவர்களின் நியாயமும் சரியாக இருந்தால்குற்றம் சொல்வதை விட்டுவிடுகிறோம். நாங்கள் எப்படியிருந்தால் உங்களுக்கென்ன, எங்களை ஏன் குற்றம் சொல்லுகிறீர்கள் என்று அவர்கள் கேட்கலாம். பிராமண தருமம்என்றாலும், இந்து தர்மம் என்றாலும் சனாதன தருமம்என்றுதானே அர்த்தம். சனாதன தருமத்தில் பிராமணன் இருந்தால், சூத்திரனும்இருக்கத்தானே வேண்டும்! அந்த அர்த்தத்தில்தானே அதன் பெயரை அமைத்தது! அதைத்தானே அவர்களும் நினைத்துச்சொல்லுகிறார்கள்! ஆங்கில தருமமான ஏகாதிபத்தியத்தைக் காப்பாற்ற வேண்டும், அதுவே உலகத்திற்கெல்லாம் நன்மைபயக்கக்கூடியதுஎன்று ஆங்கிலேயர் சொன்னால் நாம் சும்மா இருப்போமா? இருக்கிறோமா? அதேகாரணம்தான் நாங்கள் பிராமணர்களைக்குற்றம் சொல்லுவதற்கும். ஆங்கிலேயர்நம்மை அரசாட்சி செய்ய ஆரம்பித்தஉடனே அதைச் சொன்னார்கள். அதற்குப்பின் அவர்களுடையபாஷை, சட்டம், முதலியவைகளைப் படித்தோம், நியாயமும் தெரிந்துகொண்டோம், அதுபோலவே பலகாலமாகப் பிராமண தருமம் என்றும் சனாதன தருமம் என்றும் சொன்னார்கள். அதன் சட்ட திட்டமான வேதஸ்மிருதிகளை நாம் படிக்கக் கூடாதென்று சொல்லியதும் அன்றிப் படித்தாலும்படிக்கும்பக்கத்திலிருந்துகேட்டாலும்கொடும்தண்டனையைஏற்படுத்தினார்கள். இப்பொழுதோஅவர்களுடைய காயத்திரிமந்திரபுஸ்தகம் காலணாவிற்கு விற்கிறது. உபநிஷத்துகள், பிரம்ம சூத்திரபாஷியங்கள் முதலிய தத்துவ சாஸ்திரங்களை எல்லாம்தமிழில்படிக்கிறோம். போதாக்குறைக்கு வடதேசம் போய் வடமொழியில் பண்டிதனாக வந்த ஒரு தமிழனால் இருக்வேதம், *சாமவேதம் இரண்டையும் தமிழில் மொழிபெயர்த்து சூளை இராசாமிப் பிள்ளைமுப்பது, நாற்பது ஆயிரம் ரூபாய் செலவு செய்துஅச்சுப்போட்டு இனமாகவே எல்லோருக்கும் கொடுக்கிறார்; அதையும் படித்துத்தான் குற்றம் சொல்லுகிறோம். திராவிடநாட்டு உயர்குடிமக்களை யெல்லாம் இனியும் பிராமணர்கள் என்கிற ஜாதிக்குத் தாசிமக்களாகவும், வைப்பாட்டி பிள்ளைகளாகவும், அடிமைகளாகவும் இருக்கவேண்டும் என்கிற சனாதன தருமத்தைச் சொல்லுகிறார்கள். அதைக்கடவுள் சொன்னதாகவும் சொல்லுகிறார்கள். அந்தக்கடவுளை எவ்வளவுபெரியகுற்றவாளியாக்குகிறார்கள் என்பதை உணர்வதில்லை. வேதத்தில் இருக்கிறதென்கிறார்கள். அது எவ்வளவு பெரிய போர்ஜரி என்பதைத்தெரிந்து கொள்ளவில்லை. அதைநாங்கள் நம்புகிறோம் என்கிறார்கள். அந்தப் புத்திக்கு வெட்கப்படுவதுமில்லை, இதை எல்லாம் சொன்னால் பிராமணர்களைக் குற்றம் சொல்லுகிறோம், திட்டுகிறோம் என்கிறார்கள்.

சர். சி. பி. அய்யரை ஆங்கிலேயர் உடையிலும் பிராமணசபை உடையிலும் பிரீஇந்தியா என்கிற பத்திரிகையில் படம்போட்டிருக்கிறது. இந்தக்காலத்தில் யார் எந்த உடைபோட்டுக் கொண்டாலும் அதில் குற்றமும் ஆட்சேபனையும் இல்லை. பின் ஏன் இதைச்சொல்லுகிறேன் என்றால், சனாதன தருமம் என்கிறார்கள், அதைக்காப்பாற்ற வேண்டும் என்றும் சொல்லுகிறார்கள். அதற்காகச் சொல்லுகிறேன். பூர்வீகசனாதன உடை நிர்வாணம், அதற்குப்பின் தழை, தாம்பு, பட்டை, தோல், நூல், பட்டு, சரிகை வரையிலும்ஏறி ஆங்கிலேய உடையோடு நிற்கிறது. எப்படியானாலும் பட்டும் சரிகையும் சனாதன உடையில் இல்லை. சந்நியாசியானால் தலை மொட்டையாக இருக்கவேண்டும், சம்சாரியானால் பசுவின் குளப்பு அளவு குடுமி வேண்டும். கிராப்புத் தலை சனாதன தருமத்தில் இல்லை. சனாதனதருமத்தில் எந்த இடத்திலிருந்து இவர்களால் காப்பாற்றப்படப்போகிற பிராமண தருமம் பிறந்ததோ, அந்த இடத்திலும் இல்லை. தலைமயிரில்கூட சனாதன தருமத்தைக் காப்பாற்ற முடியாத இவர்கள் சனாதனிகளாம், சனாதனத்தைக் காப்பாற்றப் போகிறார்களாம். அத்தகைய பேச்சுகளால் தான் அவர்கள்ஏமாற்றைப் பரப்பி வருகிறார்கள்.

ஞானமுடையவன் பிராமணன், ஐம்புலன்களை, ஞானேந்திரிய கர்மேந்திரியங்களை வென்று தவம் செய்கிறவன் ஞானி, தந்நலம்விட்டுப்பிறருக்கு உழைப்பவன் பிராமணன்என்று சனாதனதருமம்சொல்லுகிறது, காட்டில் கூடி வேதத்தில் ஒருபாகமான ஆரண்யம் என்பதை ஆராய்ச்சி செய்து உண்மையைக்கண்டு உலகத்திற்குச் சொல்லுவது அவர்கள் தொழில். அதற்காகத்தானதருமம் ஏற்றுப்பிச்சை எடுத்து உண்பதே ஜீவனம். பிராமணர்களுக்குப் பிச்சை ஆயிற்று, பிச்சைக்கு வருகிறீர்களா, பிச்சை எடுத்துக்கொள்ளுங்கள் என்று சொல்வதுதான் சனாதனஒழுங்கின் முறை. உள்ளதை இல்லை என்றும், இல்லாததை உள்ளதென்றும், பொய்யை மெய்என்றும், மெய்யைப் பொய்யென்றும் பேசிவரும் வக்கீல் தொழிலிலிருந்து நாடகம், நாட்டியமாடும் தொழில்வரையிலும் செய்து பிழைப்பதில் சனாதனமுமில்லை, பிராமண தருமமுமில்லை, பிராமணனும்இல்லை. மலைபடிவாரத்திலும்மரத்தடியிலும்தான்பிராமண தருமம்வளர்ந்தது. ஐம்பதுஇலட்சம்போட்டு ஆங்கிலப்பள்ளிகட்டி அதில் பி. ஏ. எம். ஏ. பாஸ்பண்ணிவிட்டாலும் தருமம்வளராது. பிராமணன்தன்கலையைவிட்டுவேறுகலையைப்படித்தால் பிரஷ்டன் என்று ஸ்மிருதிகள் சொல்லுகின்றன.


தந்தி:- "புருமார்க்" திருச்சி.





## தியாகபதி உதயம்

நாங்குநேரிதாலுகா அனுமார் புதுக்குளம் சுயமரியாதைஇயக்கத் தோழர் எஸ். எம். டி. சுப்பையா அவர்களின் இல்லாள் கனகம்மாளுக்கு 27-2-46 புதன்கிழமை ஓர் பெண்மகவுபிறந்து தாயும் சேயும் நலமாயுள்ளனர். குழந்தைக்குத் தியாகபதிஎன்று பெயரிட்டு அதன் நினைவாக குடியரசு, திராவிடநாடு, தென்னாடு, சமத்துவம், தொழிலாளர்மித்திரன் இவைகளுக்கு [illegible] 1. ரூபாய்வீதம் நன்[illegible] அளிக்கப்பட்டது.




ஜெயராம்காயசுத்திலேகியத்தைச் சாப்பிடுங்கள்
தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி,
வயிற்றுவலி, புளித்தேப்பம், வயிற்றுப்பிசம்,
தடல்வாதம், இடுப்புவலி, மூலநோய்,
இவைகளைப்போக்கிமலத்தைச்சுகமாய்ப்பிரிக்கும்

அற்புத சஞ்சீவி
ஜெயராம் காயசுத்தி லேகியம்
1-சேர் ரூ. 4. ½-சேர் ரூ. 2-2-0.
வி. பி. பி. வேறு.
ஜெயராம் வைத்தியசாலை,
28, காசிவிஸ்வநாதர் கீழ்வீதி, கும்பகோணம்.

எமது சோல் ஏஜண்ட்:—
M. E. அப்துல் ரகிமான். சாகிபு, புகையிலை வியாபாரம்.
பெரிய கடைவீதி, திருவண்ணாமலை.

## குமரிக்கோட்டம்

2-ம் பக்கத் தொடர்ச்சி

கேட்டுக்கொண்டிருந்தாய். அவருக்கு வாக்குக் கொடுத்தபோது, என் புத்தி எங்கேபோயிற்று? நான் ஒருவன் இருக்கிறேன் என்றநினைப்புக்கூட இல்லை உனக்கு. இனி நீ என் மகன் அல்ல, நான் உனக்குத் தகப்பனல்ல, அடேபாவி! துரோகி! குலத்தைக்கெடுக்கப் பிறந்தகோடரிக்காம்பே! என்னை என்உயிருடன் வதைக்கிறாய். நான் தூங்கும்போது பெரியபாராங்கல்லை என் தலைமீது போட்டுச் சாகடித்து விடக் கூடாதா? என் சாப்பாட்டிலே பாஷாணத்தைக் கலந்துவிடக் கூடாதா? என்பிணம் வெந்தபிறகு நீ அந்தக்கிருஸ்தவளை மணம்செய்துகொள்ளடா, மகராஜனாக!"

"அப்பா! நான் இதுவரை தங்களிடம் இப்படிப்பட்ட கடுமையான பேச்சைக்கேட்டதில்லையே"

"அடே! பேசுவது நீ அல்ல! போதையிலே பேசுகிறாய். நாகத்தைத்தீண்டியதால் மோகம் என்ற போதை உன்தலைக்கு ஏறி விட்டது."

"மோகமல்ல அப்பா! காதல்! உண்மைக்காதல்!"

"நாடகமா ஆடுகிறாய்?"

"என் உயிர் ஊசலாடுகிறதப்பா!"?

இப்படிப்பட்ட கடுமையான உரையாடலுக்குப் பிறகுதான், பழனி, வீட்டைவிட்டு வெளிக்கிளம்பினான், தகப்பனாரையும் அவருடைய தனத்தையும் துறந்து. நாகவல்லி, தன்சினேகிதை அம்சாவுக்கு, தனக்கு ஏற்பட்ட காதல் வெற்றியைப் பற்றிக்கடிதம் எழுதிக்கொண்டிருந்தபோது, பழனி, நைடதம் படித்துக்கொண்டிருந்தான். நளனும் தமயந்தியும் காதல் விளையாட்டிலே ஈடுபட்ட கட்டத்தைப் படித்தபோது, அவனுக்கு, செய்யுளின் சுவையை நாகவல்லிக்குக் கூறவேண்டுமென்று எண்ணம் பிறந்தது. உள்ளேநுழைந்தான், கடிதத்தை எடுத்தான், படித்தான், களித்தான், பரிசும் தந்தான். வழக்கமான பரிசுதான்! அவளிடம்வேறுஎன்ன உண்டுதர? குழந்தைவேல் செட்டியார் கலியாணத்துக்குச்சம்மதித்திருந்தால், வைரமாலை என்ன, விதவிதமானநகைகள் என்ன, என்னென்னமோ தந்திருப்பான். இப்போது தரக்கூடியதெல்லாம்! மணப்பெண்ணுக்கு மாப்பிள்ளை முத்தாரமன்றி வேறோர் ஆபரணம் தரவில்லை, அது போதும் என்றாள் அந்தச்சரசி!! வயோதிகக் கணவன் தரும்வைரமாலை, இதற்கு எந்த விதத்திலே ஈடு?

நாகவல்லியின் கடிதம் முடிகிற நேரத்தில்தான், ஒரேமகனைக்கூட வீட்டைவிட்டு வெளியேற்றிவிடும் அளவுக்கு வைராக்யம்கொண்ட சனாதனச் சீலர் குழந்தைவேல் செட்டியாரைத் தாழையூர் சத்சங்கம் பாராட்டிக்கொண்டிருந்தது. ஊர் வலமாக அவர் அழைத்தச் செல்லப்பட்டபோது, அவருடைய எதிரிலே, நாகவல்லியும் பழனியும் கைகோர்த்துக்கொண்டு, நின்று கேலியாகச் சிரிப்பது போலத் தோன்றிற்று. திடசித்தத்துடன், மகனை வீட்டைவிட்டுத் துரத்திவிட்டாரே தவிர, மனதுகொந்தளித்தபடி இருந்தது, அவரையும் அறியாது அழுதார். ஆனந்தபாஷ்பம் என்றனர் அன்பர்கள்!

* * *

வெள்ளிக்கிழமை, பழனி—நாகவல்லிவாழ்க்கை ஒப்பந்தம் பத்தே ரூபாய் செலவிலே விமரிசையாக நடைபெற்றது. ஜில்லா ஜட்ஜு ஜமதக்னிதலைமை வகித்தார்.

பச்சை, சிகப்பு, ஊதா, நீலம், முதலியபல வர்ணங்களிலேபூ உதிர்வது போன்ற பாணவேடிக்கை! அதிர் வேட்டு, தாழையூரையே ஆட்டிவிடும் அளவுக்கு. அழகான தங்க நாயனத்தை அம்மையப்பனார் ஆறுமுகப்பிள்ளை, வைரமோதிரங்கள் பூண்டகரத்திலே ஏந்திக்கொண்டு, தம்பிரான் கொடுத்த தகட்டியை, ஜெமீன்தார் ஜகவீரர் பரிசாகத்தந்த வெண்பட்டின்மீது அழகாகக்கட்டிவிட்டு, ரசிகர்களைக் கண்டு ரசித்து நிற்க, துந்துபிகான துரைசாமிப்பிள்ளை, விட்டேனுபார் என்ற வீரக் கோலத்துடன் தவுலை வெளுத்துக் கொண்டிருந்தார், பவமறுத்தீஸ்வரர்பிரம்மோத்சவத்தின் ஆறும் திருவிழாவன்று. அன்று, உபயம், ஒரேமகனையும் துறந்துவிடத் துணிந்த உத்தமர் குழந்தைவேல் செட்டியாருடையது. அன்று மட்டுமல்ல, செட்டியார் ஒவ்வோர் நாளும் அதுபோன்ற ஏதாவதோர் "பகவத்சேவா" காரியத்திலேயே ஈடுபட்டுக் கொண்டிருந்தார். பணமும், பகவானுடைய சேவையினால் மளமள வென்று பெட்டியைவிட்டுக்கிளம்பியபடி இருந்தது. ஊரெங்கும் செட்டியாரின் தர்மகுணம், பகவத்சேவை இவை பற்றியே பேச்சு. "இருந்தால் அப்படி இருக்கவேண்டும், மகனென்றுகூடக் கவனிக்கவில்லை. ஜாதியைக் கெடுக்கத் துணிந்தான் பழனி, போவெளியே என்று கூறிவிட்டார், இருக்கிற சொத்து அவ்வளவும் இனிப்பகவானுக்குத்தான் என்று சங்கல்பம் செய்துகொண்டார்" என ஊர் புகழ்ந்தது. பழனியின்நிலைமையோ?

"உன் தகப்பனார் பெரியவைதீகப் பிச்சு அல்லவா? அவரைத் திருத்த முடியாத நீ, ஊரைத்திருத்தவந்து விட்டாயே, அதுசரியா?"

தகப்பனார் பேச்சைக் கேட்காதவனுக்குத் தறுதலைஎன்று பெயர் உண்டல்லவா? நீஏன் பழனிஎன்று பெயர்வைத்துக்கொண்டாய், தறுதலை என்றபெயர்தானே பொருத்தம்?"

இப்படிப்பட்ட கேள்விகள், அவற்றுக்கு எவ்வளவு சாந்தமான முறையிலே பதில் கூறினாலும், கலவரம், கல்லடி, இவைதான் பழனி பெற்றுவந்த பரிசுகள். பல இலட்சத்தைக் கால்தூசுக்குச் சமானமாகக்கருதி, தன்கொள்கைக்காக, காதலுக்காக, தியாகம் செய்த அந்தத்தீரன், சீர்திருத்தப் பிரசாரத்தில் ஈடுபட்டு, ஊரூர், சென்று சொற்பொழிவு செய்வதை மேற்கொண்டான், ஒருவேலைக்கும்போகாமல். அவனுக்கு "மகாஜனங்கள்" தந்த பரிசுகள் இவை. காதலின் மேம்பாட்டை உணரமறுத்து, கலியாணம் என்பது, கட்டளையாக இருக்கக்கூடாது, நிர்ப்பந்தமாக இருத்தலாகாது, பரஸ்பரஅன்பும் சம்மதமும் இருக்கவேண்டும், காதலர் கருத்து ஒருமித்து வாழ்வதே இன்பம் என்பன போன்ற கொள்கைகளை ஏற்கமறுத்து, ஜாதிப்பீடையை ஆண்டவன் ஏற்பாடுஎன்றுவிடாப்பிடியாகக்கொண்டு, ஒரேமகனை உலகில் பாரரியாக்கிவிட்டு, பகவத் கைங்கரியம் என்ற பெயரால், சொத்தைவிரயம் ஆக்கிக்கொண்டிருந்த குழந்தைவேல் செட்டியார், "தர்மிஷ்டர், சனாதனசீலர், பக்திமான்," என்று கொண்டாடப்பட்டார். கோயில் மாலை அவருடைய மார்பில்! ஊர்க் கோடியில் உலவும் உளுத்தர்கள் வீசும் கற்கள், பழனியின் மண்டையில்! பழனி மனம் உடையவில்லை. நாகவல்லியின் அன்பு அவனுக்கு, எந்தக் கஷ்டத்தையும் விநாடியிலே போக்கிவிடும் அபூர்வமருந்தாக இருந்தது.

"இன்று எத்தனைகற்கள்?", என்று தான்வேடிக்கையாகக் கேட்பாள் நாகவல்லி!

"பெரிய கூட்டம். வாலிபர்கள் ஏராளம். நாகு! பெண்கள்கூட வந்திருந்தார்கள்!" என்றுகூட்டத்தின் சிறப்பைக் கூறுவான் பழனி. இவ்விதமாக வாழ்க்கை. ஒரே ஊரில் அல்ல! நாகவல்லி ஆறுமாதத்துக்குள் ஒரு ஊரிலிருந்து மற்றோர் ஊருக்கு மாற்றப்படுவது வழக்கமாகிவிட்டது. அவள் மேல் குற்றம் கண்டுபிடித்ததால் அல்ல. கணவன், சூனமானாவாமே என்ற காரணத்தால். கஷ்ட ஜீவனந்தான். ஆனால், மற்றக்குடும்பங்கள், வீடு வாங்கினோம், நிலம் வாங்கினோம், இரட்டைப்பேட்டைச் செயின் செய்தோம், இரண்டுபடிகறக்கும் நெல்லூர்ப்பசு வாங்கினோம் என்று பெருமை பேசினவே தவிர, வாங்கின வீட்டுக்கு மாடி இல்லையே, நிலம் ஆற்றுக்கால் பாய்ச்சலில் இல்லையே, செயின்எட்டுச்சவரன்தானே பசுவயதானதாயிற்றே என்றகவலையுடனேயே இருந்தன, நாகவல்லி பழனி குடும்பத்துக்கு அத்தகைய பெருமையும் கவலையும் கிடையாது.

"நாகு! தெரியுமா விசேஷம்?"

"என்ன? எந்தக்கோட்டையைப் பிடித்துவிட்டீர்கள்?"

"இடித்துவிட்டேன், கண்ணே!"

"எதை?"

"மருங்கூர் மிராசுதாரரின் மனக்கோட்டையை. அவர் தன்னுடைய கிராமத்திலே எவனாவது சீர்திருத்தம் சுயமரியாதை என்றுபேசினால் மண்டையைப் பிளந்துவிடுவேன் என்று ஜம்பமடித்துக்கொண்டிருந்தாரல்லவா? நேற்று, அந்த மனக்கோட்டையை இடித்துத் தூள் தூளாக்கிவிட்டேன். பெரிய கூட்டம்! பிரமித்துப்போய்விட்டார்"

"பேஷ்! சரியான வெற்றி. எப்படி முடிந்தது"

"ஒரு சின்னத் தந்திரம்! மிராசுதாரர்மருமகன், இருக்கிறானே அவனுக்கும் மிராசுதாரருக்கும் மனஸ்தாபமாம். யுக்தி செய்தேன். அந்த மருமகனைத் தலைவராகப் போட்டுக் கூட்டத்தை நடத்தினேன். மிராசுதாரர் 'கப்சிப்' பெட்டிப் பாம்பாகிவிட்டார்"

"அவன் நமது இயக்கத்தை ஆதரிக்கிறானா?"

"இயக்கமாவது, அவன் ஆதரிப்பதாவது. அவனுக்கு என்ன தெரியும். ஒப்புக்கு உட்காரவைத்தேன்"

"என்னதான் பேசினான்?"

"அவனா? நாகா! நீ வரவில்லையே, வந்திருந்தால், வயிறு வெடிக்கச் சிரித்துவிட்டிருப்பாய் அவன் பேச்சைக்கேட்டு"

"ரொம்ப காமிக்பேர்வழியோ!"

"காமிக்குமில்லை, கத்தரிக்காயுமில்லை, அவன் உலகமறியாதவன். ஆரம்பமே, எப்படித் தெரியுமோ? "ஏலே! யார்டா அவன் காத்தான், உட்காரு கீழே. இப்ப, பிரசங்கம் நடக்கப்போவுது. சப்சிப்னு சத்தம் செய்யாமே கேட்கவேணும். எவனாவது ஏதாச்சம் சேஷ்டை செய்தா தோலை உரிச்சுப்போடுவேன். ஆமாம்! இதுதான், நாகு! அவன் பிரசங்கம்"

"அட இழவே! இந்தமாதிரி ஆட்களைச் சேர்த்தால் இயக்கம் கெட்டுத்தானே போகும்"

"சேர்க்கறதாவது! நடக்கறதாவது! கூட்டம்நடத்தவேவழிகிடைக்காமே இருந்தது, அதற்காக அந்த ஆளை இழுத்துப்போட்டேன். கூட்டம் முடிந்ததும், பூத்துப்பேருக்கு மேலே, மிகத் தீவிரமாகிவிட்டார்கள். இனி, யார்தயவும் வேண்டாம், நாமே கூட்டம்போடலாம் என்று சொன்னார்கள்"

இப்படிப்பட்ட பேச்சுத்தான், பழனி—நாகவல்லிக்கு! வேறு என்ன பேசமுடியும், புதிய பங்களாவைப் பற்றியா, பவளமாலையைப் பற்றியா?

"எங்கே நாகு! செயின்?"

"பள்ளிக்கூடத்தில்!"

'என்னவிளையாட்டுஇது? கழுத்தே அழகு குன்றிவிட்டது அந்தச் செயின்இல்லாமல். எங்கேசெயின்?'

"சேட் லீலாராமிடம் 25-க்கு அடகு வைத்திருக்கிறேன்"

"ஏன்?"

"சும்மா, தமாஷுக்கு! அந்த மிராசுதாரனின் மருமகனைச் சொல்லிவிட்டீர், உலகமறியாதவன் என்று. இன்னும் மூன்று மாதத்திலே தகப்பனாராகப் போகிற விஷயம்கூட உங்களுக்குத்தெரியவில்லை. இருபத்துஐந்து ரூபாய் வாங்கித்தான், இரண்டு மாத டாக்டர் பில் கொடுத்தேன், மிச்சமிருந்த பத்து ரூபாய்க்கு, பெர்னாட்ஷா வாங்கினேன்,"

பழனியின் குடும்பக் கணக்கு இவ்விதம் இருந்தது. அதே நேரத்தில், குழந்தை வேலச் செட்டியார் தன் குமாஸ்தாவிடம் சொல்லிக் கொண்டிருப்பார், கணக்கு,

| | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| வட்டி வரவு வடிவேல் பிள்ளைமூலம் | 650 | 0 | 0 |
| வாடகை வரவு வில்வசாமி மூலம் | 400 | 0 | 0 |
| நெல்விற்ற வகையில் வரவு | 2600 | 0 | 0 |
| நேத்திரானந்தர் மடத்துக் கைங்கரியச் செலவு | 600 | 0 | 0 |
| பிக்ஷாண்டார்கோயில் வாகன கைங்கரியச் செலவு | 1260 | 0 | 0 |
| பிடில் சுந்தரேச ஐயர் மகள் கலியாணச் செலவுக்காக | 302 | 0 | 0 |
| வாணக்கடைக்கு | 46 | 0 | 0 |
| பூப்பல்லக்கு ஜோடிக்க | 260 | 0 | 0 |

என்று இவ்விதம். செட்டியார் வீட்டிலே, சூடிக் கொள்வதற்கு ஆளில்லாததால் மூலையில் குவிந்த மலர் மாலைகள். பழனியின் மடியில் மலர்ந்த தாமரை போன்ற முகம் அதிலே ரோஜா போன்ற கன்னம், முத்துப்பற்கள், அவைகளைப் பாதுகாக்கும் பவள இதழ், பவுன்நிற மேனி,..............ஏழ்மை, ஆனால், கொள்கையின்படி வாழ்வுஅமைந்ததால் இன்பம் அங்கே. செல்வம், ஆனால் மனம் பாலைவனம், செட்டியார் வீட்டில்.

**அடுத்த இதழில் முடியும்**

—●—

## திராவிடமணி

தூத்துக்குடித் தோழர் P. பால் அவர்களின் துணைவி பெரியநாச்சியம்மையாருக்கு ஒரு ஆண் மகவு பிறந்து, 'திராவிடமணி' எனப்பெயர் சூட்டியதின் நினைவாகத் 'திராவிட நாடு' இதழுக்கு ஒரு ரூபாய் அன்பளிப்புத் தரப்பட்டது.

Edited Printed and Published by C. N. Annadurai M.A., at "Dravida Nadu" Press, 317—819 Hodgsonpet, Conjeeveram.